வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu
வார மலர்

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07 25.01.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 25 பக்கங்கள் : 16




# காணாமற்போனோர் விசாரணை 2 வருடங்களுக்குள் நிறைவடையும்!

## நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அறிவிப்பு



கொழும்பு, ஜனவரி. 25

**காணாமற்போனவர்கள் தொடர்பாக இதுவரையில் 11,000 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும், அவை தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் நிறைவு செய்யப்படும் என்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திபொன்றில் கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

காணாமல் போனவர்கள் குறித்த விசாரணைகளில் போதிய முன்னேற்றம் இல்லை என முறைப்பாடுகள் எழுந்துள்ளன.

எனினும், இதற்கு முன்னைய அரசாங்கங்களே பொறுப்பேற்க வேண்டும் என்றும், காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் பொறுப்பல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள 375 அதிகாரிகளுக்குப் பயிற்சிகளை வழங்குவதற்காகத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்தோடு, கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளில் 5,000 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை இந்த

15

# சம்பந்தனின் நம்பிக்கை கேள்விக்குறியாகியுள்ளது

## சாணக்கியம் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 25

மறைந்த பெருந்தலைவர் இரா. சம்பந்தன், ஒரு காலத்தில் முன்வைத்த "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற நம்பிக்கை, தற்போதைய ஆட்சியின் கீழ் கேள்விக்குறியாகியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் அவர் கூறிய, தீபாவளிக்கு தீர்வு கிடைக்கும் போன்ற விடயங்களை பலரும் விமர்சித்தாலும் அதன் பின்னணி குறித்து பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கருத்துத் தெரிவித்தார்.

முன்னைய நல்லாட்சி அரசாங்கத்தின் போது, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை எட்டுவதற்கான தீவிர நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டதாக சாணக்கியன் குறிப்பிட்டார்.

தீபாவளி அல்லது பொங்கலுக்குள் ஒரு தீர்வு கிடைக்கும் என்று சம்பந்தன் மிகுந்த நம்பிக்கையுடன் கூறியதற்கு அந்தச் சூழலே காரணமாக இருந்தது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவியேற்று ஒரு வருடமாகியும், அரசியல் தீர்வு தொடர்பாக எந்தவொரு காத்திரமான நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை என

15

# எதிரணியின் சூழ்ச்சிக்கு அரசு பின்வாங்காது!

## அமைச்சர் வசந்த சமரசிங்க

கொழும்பு, ஜன. 25

கல்வி மறுசீரமைப்பை சீர்குலைப்பதற்காக எதிர்க்கட்சியினர் பல்வேறு சூழ்ச்சிகளை முன்னெடுக்கின்றனர். ஆனால் அரசாங்கம் எந்த வகையிலும் கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கையில் பின்வாங்காது என வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கல்வி மறுசீரமைப்பை முன்னெடுப்பதற்கு முன்னர் நாங்கள் கலந்துரையாடல்களை முன்னெடுத்த போது, அப்போதிருந்தே எதிர்க்கட்சியினர் பல்வேறு கருத்துக்களை கூறி அதனை விமர்சிக்க ஆரம்பித்தனர். முதலில் மதம், வரலாறு என்று கூறி

15

# தேசிய மக்கள் சக்தியின் அரசை 15 ஆண்டுகள் அசைக்கமுடியாது!

## கூறுகின்றார் அமைச்சர் சந்திரசேகர்



கொழும்பு, ஜன. 25

"தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அடுத்த 15 வருடங்களுக்கு அசைக்க முடியாது." - என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

15

# பிரஜாசக்தி திட்டத்துக்கென புதிய டிஜிற்றல் கட்டமைப்பு!

கொழும்பு, ஜன. 25

சமூக வலுவூட்டல் ஊடாக வறுமையை ஒழித்தல் மற்றும் பொருளாதார நீதியை உறுதி செய்வதற்காக புதிய அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "பிரஜாசக்தி" தேசிய இயக்கம், தற்போது நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், இத்திட்டங்களை எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்காக புதிய டிஜிற்றல் கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

15

# வடக்கு - கிழக்குக்கு கன மழை!

யாழ்ப்பாணம், ஜன. 25

வங்காள விரிகுடாவில் உருவாகிய வலுக்குறைந்த வளிமண்டல மேலடுக்கு சுழற்சி தற்போது வடக்கு மாகாணத்தினை அண்மித்து நிலை கொண்டுள்ளது.

இதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் கிடைத்து வரும் மிதமான (சில இடங்களில்) மற்றும் சற்று கனமான (சில இடங்களில்) மழை எதிர்வரும் 27ஆம் வரை தொடரும் வாய்ப்புள்ளது என யாழ். பல்கலைக்கழக புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நேற்றும் இன்றும் வடக்கு மற்றும் கிழக்கு

15

# ஜனவரி மாத வருமான இலக்கை 22 நாள்களில் தாண்டியது சுங்கம்

கொழும்பு, ஜன. 25

2026 ஜனவரி மாத வருமான இலக்கை, இலங்கை சுங்கம், மாதத்தின் முதல் 22 நாள்களுக்குள் தாண்டியுள்ளதாக அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனவரி மாதத்திற்கான வருமான இலக்காக, 160.2 பில்லியன் ரூபாவை, இலங்கை சுங்கம் நிர்ணயித்திருந்தது.

இருப்பினும், மாதத்தின் 22 ஆம் நாளுக்குள் 175.4 பில்லியன் ரூபா வருமானத்தை திரட்டியுள்ளது. இது, சுமார் 9.5 வீதம் அதிகமாகும்.

டிசெம்பரில் பல நாட்கள் வழக்கமான துறைமுக மற்றும் சுங்க நடவடிக்கைகளை பாதித்த

15

# டித்வா பாதித்த குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கலில் முன்னேற்றம்

கொழும்பு, ஜன. 25

டித்வா சூறாவளியின் பின்னர் பாதிக்கப்பட்ட குடும்பங்களை மீள்குடியேற்றவும், இயல்பு வாழ்க்கையை மீட்டெடுக்கவும் அரசாங்கம் வழங்கும் இழப்பீட்டுத் தொகையை முறையான முகாமைத்துவத்துடன் அந்த மக்களுக்கு வழங்கும் பணிகள் தற்போது வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதன்படி, டித்வா சூறாவளியின் பின்னர் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மீள்குடியேற்றத்திற்காக சமையலறை உபகரணங்கள்

15

# கீரிச் சம்பாவின் தேவை அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 25

மக்களின் நுகர்வில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் சம்பா மற்றும் கீரிச் சம்பாவின் தேவை அதிகரித்துள்ளதாக விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமான துஷார விக்ரமாராச்சி தெரிவித்தார்.

மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைந்ததால் தற்போது சம்பா மற்றும் கீரிச் சம்பா போன்ற அரிசி வகைகளை அதிகமாக உட்கொள்கின்றனர்.

அதன்படி, நாடு மற்றும் கெகுலு போன்ற அரிசி வகைகளின் தேவையை விட சம்பா மற்றும் கீரிச் சம்பாவின் தேவை அதிகரித்துள்ளது.

மேலும் விவசாயிகள் சம்பா மற்றும் கீரி சம்பா அரிசியை அதிகமாக பயிரிட ஊக்குவிப்பதற்காக

15

# கிளி. விபத்தில் குடும்பஸ்தர் பலி!

கிளிநொச்சி, ஜன. 25

கிளிநொச்சி ஏ-35 பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் முதலாம் மைல் கல் பகுதியில் ஏற்பட்ட வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

யாழ்ப்பாணம் அரியாலை பகுதியை சேர்ந்த 3 பிள்ளையின் தந்தையான கருப்பையா ராஜகுமாரன் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் இருவர் பலத்த காயங்களுடன் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பரந்தன் பகுதியில் இருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்த பாரவூர்தி விசுவமடு பகுதியில்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் தீர்மானித்தால் நான் பதவி விலக தயார்

## பிரதமர் ஹரிணி அறிவிப்பு



கொழும்பு, ஜன. 25

பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று நாட்டு மக்கள் தீர்மானித்தால், நான் பதவி விலகத் தயார்- இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்ற 2026 உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்த கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதமர் நேற்று முன் தினம் நாட்டுக்கு திரும்பினார்.

இந்த நிலையில், விவாதத்தில் கலந்துகொள்வதற்காக பிற்பகல் வேளை பாராளுமன்றத் துக்கு வருகை தந்த பிரதமர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

“ஜனாதிபதியை நீக்க முடியவில்லை. குறைந்தபட்சம் பிரதமரையாவது நீக்க முயற்சி செய்தார்கள் தானே. எங்கே அது? நான் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகங்கொடுக்கவே ஓடிவந்தேன். அது வரும் வரை நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். கொண்டு வரவில்லையா? வீண் வேலை. நாங்கள் தயாராகவே இருந்தோம்.

நீங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவரத் தேவையில்லை. பிரதமர் மாற வேண்டும் என்று இந்த நாட்டு மக்கள் தீர்மானித்தால், நான் வீட்டுக்குச் செல்லவும் தயார். நாங்கள் இந்த நாட்டு மக்களுக்கே பொறுப்புக்குரியவர்கள். அதற்கமைய நாங்கள் செயல்படுவோம்” - என்றார். (எ)

# வவுனியாவில் போக்குவரத்து பொலிஸாரை மோதிவிட்டு தப்பிய லொறி சாரதி கைது!

வவுனியா, ஜன. 25

யாழ்ப்பாணம் - கண்டி பிரதான வீதியில் வவுனியா, கனுக்குன்னமடுவ பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகளை மோதிவிட்டுத் தப்பிச் சென்ற லொறி சாரதி ஒருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டளையை மீறி பயணித்த சிறிய லொறி ஒன்றை பொலிஸ் அதிகாரிகள் இருவரும் பின்தொடர்ந்து சென்றபோதே, லொறி சாரதி பொலிஸ் அதிகாரிகளை விபத்துக்குள்ளாக்கிவிட்டுத் தப்பிச் சென்றார் என்று பொலிஸார் கூறினர்.

மோட்டார் சைக்கிளை விபத்துக்குள்ளாக்கிய போது, பொலிஸ் அதிகாரிகள் இருவரும் தூக்கி வீசப்பட்டு வீதியின் ஒரு ஓரத்தில் விழுந்ததுடன், மோட்டார் சைக்கிள் லொறியில் சிக்கி இழுத்துச் செல்லப்படும் காட்சி பின்னால் வந்த வாகனத்தில் இருந்த ஒருவரின் தொலைபேசியில் பதிவாகியிருந்தது.

லொறியில் மோட்டார் சைக்கிள் சிக்கி கொண்டமையால், லொறியை வீதியில் கைவிட்டு சாரதி காட்டுப் பகுதிக்குள் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பூஓய பாலத்துக்கு அருகிலுள்ள இராணுவ முகாம் திசையில் சந்தேகநபர் தப்பிச் சென்று கொண்டிருந்த போது, இராணுவத்தினர் அவரைக் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை வவுனியா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் இரட்டைபெரியகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# மருத்துவர்களின் பகிஷ்கரிப்பு நீடிப்பு

கொழும்பு, ஜன. 25

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு நேற்றைய தினமும் தொடர்ந்தது.

தாம் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் அரசாங்கம் இதுவரையில் சாதகமான பதில்களை வழங்கவில்லை என்று அந்தச் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

48 மணித்தியாலங்களின் பின்னர் பணிப்பகிஷ்கரிப்பை மேலும் நீடிப்பதா? என்பது குறித்து நாளை திங்கட்கிழமை தீர்மானிக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

# கிளிநொச்சி- பரந்தனில் குண்டுகள் கண்டுபிடிப்பு

கிளிநொச்சி, ஜன. 25

கிளிநொச்சி - பரந்தன், உமையாள்புரம் கிராம உத்தியோகத்தர் பிரிவின் விளாவோடை பகுதியில் வெடிக்காத நிலையில் இரண்டு குண்டுகள் நேற்று முன் தினம் கண்டுபிடிக்கப்பட்டன.

விளாவோடை பகுதியில் உள்ள நெல் வயல் சாலையின் அருகே, இரண்டு குண்டுகள் இருப்பதை அப்பகுதி மக்கள் கண்டனர்.

பின்னர் இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்கு சென்ற கிளிநொச்சி பொலிஸார் குறித்த



இடத்தின் பாதுகாப்பை பலப்படுத்தியதுடன் குறித்த குண்டுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# நிர்ணய விலைக்கு பொருட்கள், சேவையை பெற முடியவில்லை

## யாழ். மாவட்ட அரச அதிபர் பிரதீபன்



யாழ்ப்பாணம், ஜன. 25

விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டாலும் உரிய விலைக்கு பொருட்கள், சேவைகளை பெற முடியாத நிலைமை காணப்படுகிறது என்று யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டுக்கான மாவட்ட விலை நிர்ணயக் குழுக் கூட்டத்தின் முதலாவது அரையாண்டுக்கான கூட்டம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலும், வடக்கு மாகாண பிரதம பிரதிச் செயலாளர் சுதாகரின் இணைத் தலைமையிலும் நேற்று முன்தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர் கூறுகையில், மாவட்ட விலை நிர்ணயக் கூட்டமானது மிக முக்கியமானது. அரசாங்கத்தின் வேலைத் திட்டங்கள் மற்றும் தனியார் துறைக்கும் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான விலைகள் நிர்ணயம் தேவையாகவுள்ளது. மேலும், விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டாலும் உரிய விலைக்கு பொருட்கள், சேவைகளை பெற முடியாத நிலைமை காணப்படுகிறது. இதற்கேற்ப பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் இணைந்து விலைகளை நிர்ணயம் செய்ய வேண்டும். அரசாங்கத்தின் அபிவிருத்தி செயல்பாட்டுக்கு இது அத்தியாவசியமாகவுள்ளது- என்றார்.

இந்தக் கூட்டத்தில் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான விலைகள் ஆராயப்பட்டு நிர்ணயிக்கப்பட்டன.

இதில், மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா. ஜெயகரன், பிரதம பொறியியலாளர் க. திருக்குமார், பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், தொடர்புடைய சேவை அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எ)

வல்வெட்டித்துறை பட்டத் திருவிழா:

# சுகாதார விதிமுறைகளை மீறிய உணவு நிலையங்களுக்கு தண்டம்

யாழ்ப்பாணம், ஜன. 25

வல்வெட்டித்துறை பட்டத் திருவிழாவின்போது சுகாதார விதிமுறைகளை மீறிய உணவு நிலையங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சுகாதார விதிமுறைகளை பேணத் தவறிய 24 உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கடந்த தைப்பொங்கல் தினத்தன்று வல்வெட்டித்துறை உதய சூரியன் கடற்கரையில் நடைபெற்ற பட்டத் திருவிழாவின் போது, மருத்துவச் சான்றிதழ் இன்றி உணவைக் கையாண்டமை, திண்மக்கழிவுகளைத் திறந்த வெளியில் வீசியமை, அனுமதிக்கப்பட்ட உணவுத்தரக் கொள்கலன்களைப் பயன்படுத்தாது பிளாஸ்ரிக் கொள்கலன்களைப் பயன்படுத்தியமை, முகச்சவரம் மற்றும் தனிநபர் சுகாதாரம் பேணாமல் உணவைக் கையாண்டமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இதனடிப்படையில் ஐஸ்கிரீம் வாகனங்கள், பஞ்சு மிட்டாய் உற்பத்தியாளர்கள், காரச் சுண்டல் வண்டிகள் மற்றும் பானிப் பூரி விற்பனை நிலையங்கள் உள்ளிட்ட 24 உணவு நிலையங்களுக்கு எதிராக, வல்வெட்டித்துறை நகர சபையின் பொதுச்சுகாதார பரிசோதகர் பா. தினேஷ், பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

குறித்த வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, 24 உரிமையாளர்களில் 19 பேர் மன்றில் முன்னிலையாகி, தம் மீதான குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டனர்.

இதனையடுத்து, குறித்த 19 உரிமையாளர்களையும் கடுமையாக எச்சரித்த மன்று, அவர்களுக்கு மொத்தமாக 4 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது.

இதேவேளை, மன்றில் முன்னிலையாகாத ஏனைய 05 உரிமையாளர்களையும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

சுழிபுரத்தில் 30 ஆண்டுகள் நிலை கொண்டிருந்த

# இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவம்

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியில் கடந்த 30 ஆண்டு காலமாக முகாமிட்டு இருந்த இராணுவத்தினர் நேற்று முன்தினம் அந்த முகாமை விட்டு முழுமையாக வெளியேறினர்.

இவ்வாறு வெளியேறிய இராணுவத்தினர் சங்கானை படைமுகாமுக்கு சென்றனர்.

இராணுவத்தினர் அந்த இடத்தை விட்டு வெளியேறுவது குறித்தான கடிதத்தை, 513ஆவது காலாட்படை பிரிவின் கட்டளை தளபதி சில தினங்களுக்கு முன்னர் சங்கானை பிரதேச செயலாளர் கவிதா உதயகுமாரிடம் கையளித்தார்.

இதேவேளை, பண்டத்தரிப்பு பகுதியில் உள்ள இராணுவ முகாமும் அகற்றப்படவுள்ளதாக தெரியவருகிறது. இந்த பகுதியில் நீண்ட நெடுங்காலமாக முகாமிட்டு தங்கியிருந்த இராணுவத்தினர் அராலி பகுதியில் உள்ள இராணுவ முகாமுக்கு மாற்றப்படவுள்ளனர்.

பண்டத்தரிப்பு படை முகாமானது 100 அடி நீளத்தை கொண்டதால் அதனை அகற்றுவதற்கு காலப்பகுதி தேவை என்பதால் அவர்கள் அங்கிருந்து வெளியேற சற்று தாமதமாகும் என அறிய முடிகிறது. (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்த தலைவர்களை சாபம் என்று பேசுவது வீரமல்ல: முட்டாள்தனமானது

## தொண்டமான் பெயர் விவகாரம் குறித்து ஜீவன் எம். பி.

கொழும்பு, ஜன. 25

மறைந்த முன்னாள் தலைவர்களை சாபம் என்று பேசுவது வீரம் என்று மலையக பிரதிநிதிகள் கருதலாம். ஆனால், அது தலைக்கனத்தால் வரும் முட்டாள்தனம்- இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

சௌமிய மூர்த்தி தொண்டமானின் பெயரில் ஞாபகார்த்த மண்டபம் உருவாக்கியது சாபக்கேடு என அரசின் மலையகப் பிரதிநிதி குறிப்பிடுகிறார். அவர் பிரஜாவுரிமை பெற்றுக்கொடுத்த காரணத்தால் தான் இவர் சபைக்கு வந்து வாய்கிழியப் பேசுகிறார் என்றும் ஜீவன் எம். பி. கூறினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பல்கலைக்கழகங்கள் திருத்த சட்டமூலம் இரண்டாம் மதிப்பீட்டின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகாரத்த மண்டபம் பற்றி சபையில் பேசப்பட்டது. 2005 ஆம் ஆண்டே இந்த ஞாபகார்த்த மண்டபம் ஸ்தாபிக்கப்பட்டது. அப்போதைய அரசாங்கத்தில் தற்போதைய ஜனாதிபதி அமைச்சராக பதவி வகித்தார் . ஆகவே, உண்மையை மறந்து விட்டு பேச வேண்டாம்.

2005 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த மண்டபத்துக்கு குடும்ப உறுப்பினர்களின் பெயர் எவ்வாறு வைக்கப்பட்டது என்று கேள்வி கேட்கப்படுகிறது. ஜனாதிபதிக்கு வால் பிடித்து தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்றத்துக்கு வருகை தருவது பெரிய புத்திசாலித்தனமல்ல, முதலில் அரசாங்கம் என்றால் என்ன என்பதை கற்றுக்கொள்ளுங்கள்.

சௌமிய மூர்த்தி தொண்டமானின் பெயரில் ஞாபகார்த்த மண்டபம் உருவாக்கியது சாபக்கேடு என்று குறிப்பிடுகின்றீர்கள், எந்த தைரியத்தில் இதனைக் குறிப்பிடுகின்றீர்கள்?அவர் பிரஜாவுரிமை பெற்றுக்கொடுத்த காரணத்தால் தான் சபைக்கு வந்து வாய்கிழிய பேசுகின்றீர்கள். மலையக பிரதிநிதி வந்த வழியை மறந்து விட்டார்.

முன்னாள் தலைவர்களை சாபம் என்று பேசுவது வீரம் என்று சில மலையகப் பிரதிநிதிகள் கருதலாம், அது உண்மையில் வீரமல்ல, அது அரசியல் சுயநலம் மற்றும் தலைக்கனத்தால் வரும் முட்டாள்தனம். அதை முதலில் புரிந்துக் கொள்ளுங்கள்.- என்றார். (எ)

# நெருக்கடிகளை எதிர்கொள்ள போதியளவு நிதிவசதி இல்லை

## முன்னாள் அமைச்சர் பந்துல எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 25

நாட்டில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்கள் அல்லது வெளிநாடுகளில் ஏற்படும் அதிர்ச்சிகரமான சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்கு போதுமான நிதிவசதி இலங்கையிடம் இல்லை என்று முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஹோமாகம பகுதியில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும், நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான ரூபாயோ அல்லது வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்குத் தேவையான டொலர்களோ எம்மிடம் இல்லை. அத்துடன், அரசாங்கத்தின் இந்த வருட வருமானம் 5. 3 ட்ரில்லியன் ரூபாய் எனவும் அர சாங்கத்தின் மீளெழும் செலவினம் 5. 6 ட்ரில்லியன் ரூபாய் எனவும் பந்துல குறிப்பிட்டார்.

இதற்கமைய, அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு 300 முதல் 400 பில்லியன் ரூபாய் வரை பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் மண்சரிவுகள், சூறாவளி போன்ற உள்ளகத் தாக்கங்கள் ஏற்பட்டாலும் அல்லது வெளிநாடுகளில் ஏற்படும் யுத்தம் போன்ற வெளிப்புறத் தாக்கங்கள் ஏற்பட்டாலும், அத்தகைய அதிர்வுகளை எதிர்கொள்வதற்குத் தேவையான வலுவான பொருளாதார நிதி நிலைமை எமது நாட்டில் இல்லை.

இதற்கமைய, நாட்டில் நிலவும் அடிப்படைப் பிரச்னை ரூபா மற்றும் டொலர் இல்லாததே என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

# கல்வி சீர்திருத்தத்துக்கு ஆதரவாக பெற்றோர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

கண்டி, ஜன. 25

ஆறாம் தரத்துக்கான புதிய கல்விச் சீர்திருத்தத்தை அமுல்படுத்தக் கோரி கண்டி- நாவலப்பிட்டி நகரில் நேற்றுச் சனிக்கிழமை காலை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

'எங்கள் குழந்தைகளின் ஒளிமயமான எதிர்காலத்துக்காக அனைத்து ஆறாம் தர வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களும் ஒன்றிணைவோம்' என்ற தொனிப்பொருளின் கீழ், கல்வி மறுசீரமைப்புக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்த அமைதிப் போராட்டம் நடைபெற்றது.

இதில், ஆறாம் தர மாணவர்களின் பெற்றோர்கள் பெருமளவில் கலந்து கொண்டு, கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் முன்வைக்கப்பட்டுள்ள புதிய கல்விச் சீர்திருத்தம் உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். (எ)




# பலாங்கொட கஸ்ஸப தேரர் மருத்துவமனையில் அனுமதி

திருகோணமலை, ஜன. 25

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பலாங்கொட கஸ்ஸப தேரர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மருத்துவப் பரிசோதனைக்காக பலாங்கொட கஸ்ஸப தேரர் திருகோணமலை மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்று சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஏ. சி. கஜநாயக்க தெரிவித்தார்.

அண்மையில் திருகோணமலை சம்புத்த ஜயந்தி விகாரையில் ஏற்பட்ட சர்ச்சை தொடர்பில், பலாங்கொட கஸ்ஸப தேரர் உட்பட நான்கு தேரர்கள் மற்றும் மேலும் 06 சந்தேக நபர்கள் கைதாகி எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், பலாங்கொட கஸ்ஸப தேரருக்கு ஏற்பட்ட நோய் நிலைமை காரணமாக, இரத்தப் பரிசோதனை ஒன்றை மேற்கொள்வதற்காகவே அவர் இவ்வாறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.(எ)

# கூட்டுறவு உற்பத்தி பொருட்கள் விற்பனையும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஆரம்பமான அதே நாளான நேற்று முன்தினம் உள்ளூரிலும் கூட்டுறவாளர்களின் கண்காட்சி ஆரம்பமானது.

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு சபையால் யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களினுடைய உற்பத்திப் பொருட்களின் விற்பனையும் கண்காட்சியும் நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து மூன்று நாட்கள் இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

வெள்ளிக்கிழமை காலை குறித்த கண்காட்சியை சம்பிரதாயபூர்வமாக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆரம்பித்து வைத்தார். அரசியல், சமூக ஆய்வாளரான செல்வின் இரேனியஸ் கூட்டுறவின் முக்கியத்துவமும் அதன் இன்றைய நிலையும் தொடர்பில் சிறப்புரையாற்றினார்.

புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், சிக்கன கடன் வழங்குவோர் கூட்டுறவு சங்கம், கால் நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம், பேக்கரி பொருட்கள் உற்பத்தி சங்கம், தோற்பொருள் அபிவிருத்தி கூட்டுறவு சங்கம், பழ உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் என பல்வேறு சங்கங்களும் இணைந்து கொண்டு தங்களது தரமான உற்பத்திகளை காட்சிப்படுத்தியுள்ளன.

இன்று ஞாயிற்றுக் கிழமையுடன் நிறைவடையவுள்ள இந்தக் கண்காட்சியில் கூட்டுறவு சபையின் அங்கத்துவ சங்கங்களின் உற்பத்திப் பொருள்களை பொது மக்கள் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ-05)

# பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் பணி இடைநிறுத்தம்



கொழும்பு, ஜன. 25

பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகமும் பணிக்குழாம் பிரதானியுமான சமிந்த குலரத்ன பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த பணி இடைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவரது நியமனம் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல் நிலை காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# வவுனியா விபத்தில் இருவர் காயம்

வவுனியா, ஜன. 25

வவுனியா கனகராயன்குளம் பகுதியில், இரண்டு வாகனங்கள் மோதி இடம்பெற்ற விபத்தில், இருவர் காயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனம், எதிர்த்திசையில் பயணித்த கூலர் வாகனத்துடன் மோதி விபத்திற்குள்ளானது. விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில், மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை, கனகராயன்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# நவீன வசதிகளுடன் கூடிய 5 மலசல கூடங்கள் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணம், புங்குடுதீவு இறுப்பிட்டி ஐங்கரன் சனசமூக நிலைய வளாகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய 5 மலசல கூடங்கள் நேற்று முன்தினம் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டன.

புங்குடுதீவு இறுப்பிட்டி அரிய நாயகம்புலம் சிறீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமான நிலையில், ஆலயத்துக்கு வரும் பக்தர்களின் தேவைகளை கருத்தில் கொண்டு ஐங்கரன் சனசமூக நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்ட இந்த மலசல கூடங்கள் திறந்து வைக்கப்பட்டன.

அரிய நாயகம்புலம் சிறீ வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு புங்குடுதீவு இறுப்பிட்டி ஐங்கரன் சனசமூக நிலையத்தில் வருடம் தோறும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் துன்புறுத்தல் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 25

பாராளுமன்றத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் பாலியல் துன்புறுத்தல் சம்பவம் தொடர்பான முழுமையான அறிக்கை இதுவரை சபைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 146 இன் கீழ், பாராளுமன்ற பணியாட்தொகுதி ஆலோசனைக் குழுவில் இந்தச் சம்பவம் குறித்து நேற்று முன்தினம் கலந்துரையாடப்பட்ட போதிலும் இது தொடர்பில் விரிவான அறிக்கை முன்வைக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

முழுமையான அறிக்கை இல்லாமல் எதிர்க்கட்சியினரால் இவ்விடயம் குறித்து கருத்துக்களை வெளிப்படுத்த முடியாது. தற்போது சபைக்கு வழங்கப்பட்டுள்ள ஆவணத்தில் இந்தச் சம்பவம் தொடர்பான பரிந்துரைகள் மட்டுமே காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, இவ்விடயம் குறித்து விவாதிப்பதற்கு முன்னதாக, அது பற்றி விரிவாக படித்துப் பார்ப்பதற்கு ஏதுவாக, முறையான முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சஜித் பிரேமதாஸ கேட்டுக்கொண்டார். (எ)



# ஆஸி தினக் கொண்டாட்டத்தில் எதிர்க்கட்சி தலைவர் பங்கேற்பு

கொழும்பு, ஜன. 25

அவுஸ்திரேலிய தினக் கொண்டாட்ட நிகழ்வு கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இதில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கலந்து கொண்டார்.

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மேத்யூ டக்வொர்த் மற்றும் அவரது மனைவி ஆகியோரின் அழைப்பை ஏற்றே சஜித் பிரேமதாஸ இந்த நிகழ்வில் பங்கேற்றார்.

பல நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் அரசியல்வாதிகள் உள்ளிட்ட தரப்பினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (எ)

# விகாரை விவகாரம் குறித்து தற்றுணிவுடன் பேசிய அநுர

## தமிழ் அரசு கட்சி வரவேற்பு

கொழும்பு, ஜன. 25

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தற்றுணிவுடன் பேசினார் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

ஒரு பௌத்தர் கூட வாழாத இடத்தில் விகாரையை கட்டி அந்த விகாரைக்கு பஸ்களில் ஆட்களை அழைத்துச் சென்று அங்கு போராட்டத்தில் ஈடுபட்டு நாட்டுக்கு தீ வைக்க முயற்சித்த போது கடந்த கால ஆட்சியாளர்கள் வாயை மூடிக்கொண்டிருந்தார்கள் ஆனால், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வாயை திறந்துள்ளார் என்றும் சாணக்கியன் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பல்கலைக்கழகங்கள் திருத்த சட்டமூலம் இரண்டாம் மதிப்பீட்டின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விவசாயத்துறையில் மாற்றம் ஏற்படுத்த போய் நெருக்கடிக்குள்ளாகி வீட்டுக்குச் சென்றார். அதே போன்று இந்த அரசாங்கமும் தற்போது கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்தப்போய் நெருக்கடியை சந்தித்துள்ளது. கல்வி அமைச்சர் நாட்டில் இல்லாத நேரத்தில் கல்வி மறுசீரமைப்பு பற்றி பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்டது. இதன் பின்னணி என்ன?

இந்த அரசாங்கம் இனவாத அரசாங்கம் என தொடர்ச்சியாக கூறி வருகிறோம். இதற்கு பல விடயங்களை உதாரணமாக கூற முடியும். நாட்டில் உள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் 'பல்கலைக்கழக சபை' உள்ளது. தமிழர்கள் அதிகளவில் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்தில் கிழக்கு பல்கலைக் கழகத்தில் பல்கலைக்கழக சபையில் கடந்த அரசாங்கத்தில் 8 தமிழர்கள், 5 முஸ்லிம்கள், 2 சிங்களவர்கள் என்ற அடிப்படையில் நியமிக்கப்பட்டார்கள்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் 5 தமிழர்கள், 3 முஸ்லிம்கள், 7 சிங்களவர்கள் என்ற அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது"- என்றார். (எ)

# 270 கிலோ ஐஸ்டன் சிக்கிய 2 படகுகள்

கொழும்பு, ஜன. 25

தெற்கு கடற்கரையிலிருந்து ஆழ்கடலில் அதிக போதைப் பொருட்களை கொண்டு சென்ற இரண்டு பல நாள் மீன்பிடி இழுவை படகுகளை கடற்படை மற்றும் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் இணைந்து கைப்பற்றியுள்ளனர்.

இந்த படகுகளை சோதனை செய்தபோது, படகுகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 270 கிலோ கிராம் ஐஸ் மற்றும் ஹெரோயின் ஆகியவற்றை கண்டுபிடித்தனர்.

இது குறித்து மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (எ)

# இ.போ.ச. பஸ்- தனியார் பஸ் நேருக்கு நேர் மோதி விபத்து

கொழும்பு, ஜன. 25

ஹல்தும்முல்ல, சொரகுனே பகுதியில் இ. போ. ச. பேருந்தும் தனியார் பேருந்தும் நேருக்கு நேர் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்த விபத்தில், ஹப்புத்தளையிலிருந்து கிரவனாகம வரை பயணித்த தனியார் பேருந்தும் கிரவனாகமவிலிருந்து பண்டாரவளை வரை பயணித்த இ. போ. ச. பேருந்துமே சிக்கியுள்ளன.

விபத்து காரணமாக பேருந்துகளில் பயணித்த 6 பயணிகள் காயமடைந்து ஹல்தும்முல்ல மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ)

# மக்கள் நுகர்வில் ஏற்பட்ட மாற்றத்தால் சம்பா, கீரி சம்பா தேவை அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 25

மக்களின் நுகர்வில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் சம்பா மற்றும் கீரி சம்பாவின் தேவை அதிகரித்துள்ளது என்று விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் துஷார விக்ரமாராச்சி தெரிவித்தார்.

மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைந்ததால் தற்போது சம்பா மற்றும் கீரி சம்பா போன்ற அரிசி வகைகளை அதிகமாக உட்கொள்கின்றனர்.

இதன்படி, நாடு மற்றும் கெகுலு போன்ற அரிசி வகைகளின் தேவையை விட சம்பா மற்றும் கீரி சம்பாவின் தேவை அதிகரித்துள்ளது.

மேலும், விவசாயிகளை சம்பா மற்றும் கீரி சம்பா வகை நெல்லை அதிகமாக பயிரிட ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் இந்த வகைகளின் கொள்முதல் விலையை அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார். (எ)

# இலங்கையர்களின் குடும்பங்களுக்கு ரூ.197 மில்லியன் இழப்பீடு கிடைத்தது

கொழும்பு, ஜன. 25

கட்டாரில் பணியாற்றிய போது உயிரிழந்த இலங்கையர்களின் குடும்ப உறவினர்களுக்காக 2025ஆம் ஆண்டிலிருந்து இதுவரை சுமார் 197 மில்லியன் ரூபாயை டோஹாவிலுள்ள இலங்கை தூதரகம் பெற்றுக் கொடுத்துள்ளது.

இதில் சுமார் 23 மில்லியன் ரூபாய் பணம் தூதரகத்தின் ஊடாக நேரடியாக உரிய குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய 174 மில்லியன் ரூபாய் பணம், இலங்கையிலுள்ள குடும்ப உறவினர்களிடம் ஒப்படைப்பதற்காக கொழும்பிலுள்ள வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விசேடமாக, 2014 ஆம் ஆண்டு முதல் தீர்க்கப்படாமல் இருந்த சில வழக்குகள் தொடர்பான இழப்பீட்டுத் தொகைகளையும் இம்முறை பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது.

எவ்வாறாயினும், கடந்த 2024 ஆம் ஆண்டிலும் இத்தூதரகம் 172 மில்லியன் ரூபாய்க்கும் அதிக இழப்பீட்டுத் தொகையை இலங்கை குடும்பங்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்திருந்தது. (எ)

# புதிய சிறைச்சாலையை நிர்மாணிக்க நடவடிக்கை

கொழும்பு, ஜன. 25

சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை குறைத்து கொள்வதற்கு வெலிசறை பகுதியில் புதிய சிறைச்சாலையை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த சிறைச்சாலை குறித்து வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் புதிய கட்டடங்களை நிர்மாணித்து கைதிகளை விரைவில் அங்கு அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்கள் சிலவற்றின் கட்டடங்களை தெரிவு செய்து அவற்றை தற்காலிக சிறைச்சாலைகளாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நீதியமைச்சு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (எ)

# 22 நாட்களில் மட்டும் 194, 553 சுற்றுலா பயணிகள் வருகை

கொழும்பு, ஜன. 25

2026 ஆம் ஆண்டு ஆரம்பமான முதல் 22 நாட்களுக்குள் ஓர் இலட்சத்து 94, 553 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் ஒரே நாளில் அதிகளவான சுற்றுலாப் பயணிகளின் வருகை ஜனவரி 15 ஆம் திகதி பதிவாகியுள்ளது. அன்றைய தினம் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 10, 483 ஆகும் என்று குறித்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த 22 நாட்களுக்குள் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த நாடாக இந்தியா காணப்படுவதுடன், அந்த எண்ணிக்கை 35,177 ஆகப் பதிவாகியுள்ளது.

இதற்கு மேலதிகமாக, ரஷ்யாவிலிருந்து 19,930 பேரும், ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து 19,893 பேரும் மற்றும் ஜேர்மனிலிருந்து 12,822 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
25.01.2026 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், தை 11

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# தமிழ் மக்கள் மீதான கரிசனை

தமிழ் மக்கள் அவர்களது பகுதியை ஆளும் உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருக்கின்றார். தென்னிலங்கையில் எதிரணி அரசியலில் இருக்கும் ஒருவர் இவ்வாறு கூறுவது நல்ல விடயம்தான். ஆனால் தாங்கள் அதிகாரத்தில் இருக்கின்றபோது, தாங்கள் சார்ந்த ஆட்சிக்கு தமிழ் மக்கள் சார்ந்து ஏன் அழுத்தம் கொடுக்கவில்லை - புதிய அரசியல் யாப்புக் கதைகளை கூறி காலத்தை விரயம் செய்தபோது ஏன் அது பற்றி தாங்கள் அங்கம் வகித்த அரசாங்கத்துடன் முரண்படவில்லை - அப்போது அமைதியாக இருந்தவர்கள் எல்லோருக்கும் தமிழ் மக்கள் மீது திடீர் கரிசனை வருவதற்கு காரணம் என்ன? இப்படியான கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாதது.

இப்போதெல்லாம் எதிரணியைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தமிழ் மக்கள் மீதான கரிசனை உள்ளவர்கள் போல் நடந்து கொள்வதற்கு பின்னால் ஒரேயொரு காரணம்தான் இருக்கின்றது - அதாவது, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு துருப்புச் சீட்டுகள் தேவைப்படுகின்றன - அதற்கு தமிழ் மக்கள் மீதான கரிசனை என்பதும் ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தப் படுகின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தேர்தல் காலத்தில் குறிப்பிட்டது போல் சில விடயங்களில் முன்னேற்றத்தை காண்பிக்கவில்லை- அதேவேளை அரசியலமைப்பில் உள்ளவற்றைக்கூட அமுல்படுத்துவதில் தெளிவான நிலைப்பாடுகளை வெளிப்படுத்தவில்லை. ஆனால் அதற்காக எதிரணியில் உள்ளவர்கள் திடீரென்று தங்களை தமிழ் மக்களின் ஆபத்தாண்டவர்கள் போன்று காண்பித்துக் கொள்வது அடிப்படையிலேயே நேர்மையற்றது.

ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முதல் முதலாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கின்றது - ஆனால் கடந்த காலத்தில் இலங்கைத் தீவை மாறி, மாறி ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்காக என்ன செய்தனர்? எவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டனர் என்பது வரலாறு. பொதுப் புத்தியின் வழியாக சிந்திக்கும் ஒவ்வொரு தமிழ் குடிமகனும் அதனை நன்கறிவான்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பல விடயங்களில் முன்னேற்றத்தை காண்பிக்கவேண்டும் என்பது உண்மை - அதற்காக தமிழ் மக்களை ஒரு துருப்புச் சீட்டாக முன்வைத்து தேசிய மக்கள் சக்தியை எதிரணியைச் சேர்ந்தவர்கள் விமர்சிக்க முற்படுவதில் எவ்வித அரசியல் நேர்மையும் இல்லை.

யுத்தத்திற்கு பின்னரான காலப் பகுதியில் மகிந்த ராஜபக்ஷ காலம் என்பது அடிப்படையில் தமிழர்கள் உரையாடுவதற்கான வாய்ப்பற்றிருந்த காலமாகும். யுத்த வெற்றிவாதத்தை அரசியல் முதலீடாகக் கொண்டிருந்த ராஜபக்ஷ குடும்ப அரசியல் என்பது அடிப்படையிலேயே தமிழர் விரோத ஆட்சியாகவே இருந்தது. நல்லாட்சி என்று சொல்லப்பட்ட காலம் நம்பிக்கைக்குரிய காலமாக தமிழ் மக்களால் நோக்கப்பட்டது. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உண்மையிலேயே சில விடயங்களை நம்பியது. ஆனால் இறுதியில் எதுவும் நிகழவில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ஈழத் தமிழர் அரசியல் சார்ந்து மீண்டும் பேசக் கூடிய சூழல் இப்போது ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் அதற்கான நம்பிக்கையை அரசியல் தளத்திலும் சமூகத் தளத்திலும் தேசிய மக்கள் சக்தி இதுவரையில் கட்டியெழுப்பவில்லை என்பது உண்மை.

ஈழத் தமிழ் மக்கள், தங்கள் பகுதியில், தங்களை தாங்களே தீர்மானித்து வாழ்வதற்கான அரசியல் சூழல் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதில் உண்மையிலேயே எதிரணியினருக்கு அக்கறையிருந்தால், அந்தச் செய்தியை சிங்கள மக்களிடம் கொண்டு செல்லுங்கள். திருகோணமலை புத்தர் சிலை விடயத்தில் அரசாங்கம் ஒரு நடவடிக்கை எடுத்தபோது எதிரணியினர் எவருமே அரசாங்கத்தின் நடவடிக்கையை ஆதரிக்கவில்லை - மாறாக எதிர்த்தனர் - அதன் விளைவாகவே அரசாங்கம் பின்வாங்க நேர்ந்தது என்பதையும் இந்த இடத்தில் நினைத்துக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

# தனியார்துறைக்கும் ஓய்வூதியம்?

கொழும்பு, ஜன. 25

தனியார் துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக தொழிலாளர் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் உஷானி உமங்கா எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெளிவுபடுத்தினார்.

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றின் வேறுபாடுகள் குறித்து ஏற்கனவே விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

ஊழியர் சேமலாப நிதியை ஓய்வூதியமாக மாற்றப்போவதாக தான் கூறவில்லை எனவும், அது சமூகப் பாதுகாப்புக்காகவே உள்ளதாகவும் அவர் கூறினார்.

ஊழியர் சேமலாப நிதியைக் குறைக்காமல் அல்லது மாற்றாமல், தனியார் துறை ஊழியர்களுக்குத் தனியானதொரு ஓய்வூதிய முறையை வழங்குவது குறித்தே அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது என அவர் கூறினார்.

(அ)

# கூட்டுறவு உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி இன்றுடன் நிறைவடைவு

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஆரம்பமான அன்று உள்ளூரிலும் கூட்டுறவாளர்களின் கண்காட்சியும் ஆரம்பமாகியுள்ளது. இன்று ஞாயிற்றுக் கிழமையுடன் மேற்படி கண்காட்சி நிறைவடைகிறது.

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு சபையினால் யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களினுடைய உற்பத்திப் பொருள்களின் விற்பனையும் கண்காட்சியும் நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

நேற்று சனிக்கிழமை மாலை மழைக்கு மத்தியிலும் ஏராளமான மக்கள் வருகை தந்து மேற்படி கண்காட்சியை பார்வையிட்டுச் சென்றனர்.



புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், சிக்கன கடன்வழங்குவோர் கூட்டுறவு சங்கம், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம், பேக்கரி பொருள்கள் உற்பத்தி சங்கம், தோற்பொருள் அபிவிருத்தி கூட்டுறவு சங்கம், பழ உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் என பல்வேறு சங்கங்களும் இணைந்து கொண்டு தங்களது தரமான உற்பத்திகளை காட்சிப்படுத்தியுள்ளன.

கூட்டுறவுச் சபையின் அங்கத்துவ சங்கங்களின் உற்பத்திப் பொருள்களை பொது மக்கள் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள முடியும்.

# 22 நாட்களில் மட்டும் இலங்கைக்கு 2 இலட்சம் சுற்றுலாப் பயணிகள்!

கொழும்பு, ஜன. 25

இந்த வருடத்தின் முதல் 22 நாட்களில் மாத்திரம் சுமார் 194,553 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.


இந்த காலப்பகுதியில், அதிகபட்சமாக ஒரு நாள் சுற்றுலாப் பயணிகள் வருகை ஜனவரி 15ஆம் திகதி பதிவாகியுள்ளது, அதன்படி 10,483 சுற்றுலாப் பயணிகள் குறித்த தினத்தில் வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த 22 நாட்களில் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர், அதற்கமைய இந்தியாவிலிருந்து 35,177 சுற்றுலாப் பயணிகள் வருகைத்தந்துள்ளனர்.

அதனை தொடர்ந்து ரஷ்யாவிலிருந்து 19,930 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 19,893 சுற்றுலா பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணமே வாழ்வு!



வாழ்வு என்பது ஒவ்வொரு நாளும் பல்வேறு விதமான சிறிய-பெரிய சவால்களை நமக்குத் தந்து கொண்டே இருக்கிறது. நாம் எதிர் கொள்ளும் தோல்விகளால் மனம் உடைந்து வெளிவர முடியாத கூண்டுக்குள் நம்மை அடைத்துக் கொள்வதும், எதிர்- கொள்ளும் தோல்விகளை வெற்றிப்படிகளாக மாற்றுவதும் நம் எண்ணங்களைப் பொருத்தே அமையும்.

என்னால் முடியாது என்பதே மனதின் எண்ணமானால் நாம் எடுத்த காரியத்தைச் சாதிக்க முடியாது. என்னால் முடியும் என்பது எண்ணமாகும் போது வெற்றியை நோக்கிச் செல்வோம்.

தினமும் நாம் மற்றவர்கள் மீது பல வகையான தாக்கத்தை ஏற்படுத்துகிறோம். நம் உறவினர்கள், நண்பர்கள், சக பணியாளர்கள், உடன் செயல்படுகிறவர்கள், புதிதாகக் காண்பவர்கள் எனப் பலதரப்பட்டவர்கள் நம்மால் பலதரப்பட்ட தாக்கத்துக்கு உள்ளாகின்றனர். நம்மைப் பற்றிய உயர்வான எண்ணத்தை மற்றவர்கள் கொள்வதும், நம்மைப் பற்றி தாழ்வாக அவர்கள் எண்ணுவதும் நம் கையில் இருக்கிறது.

நம் உடல் மொழியாலும், செயல்களினாலும் மற்றவர்கள் மீது நேர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தும் போது நம்மீதான சமூக நன்மதிப்பு உயர்கிறது. மற்றவர்களுக்கு உதவுவதும், மற்றவர்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவதும், பொது நலத் தொண்டு புரிவதும் நம் எண்ணங்களின் செயல்பாடே.

நம் மனதில் உலாவரும் எண்ணங்களில் ஒரு சிலவற்றின் மீதே நாம் நம் கவனத்தைத் திருப்புகிறோம். அந்த எண்ணம் காட்டும் வழியில் நடவடிக்கைகள் மேற்கொள்கிறோம். எண்ணற்ற எண்ணங்கள் மனதில் தோன்றி, வந்த வேகத்தில், நம் உணர்வுகளைத் தூண்டாது மறைந்தும் விடுகின்றன.

இலக்கை நோக்கி மனது திசை திருப்பும். இலக்கை அடைவதற்கான வழிமுறைகளை ஆராயும். இது குறித்த முந்தைய அனுபவங்கள் மற்றும் மனதில் உள்ள தகவல்கள் ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்யும். ஆழ்மனதுடன் சைகைகள் வாயிலாகவோ, வார்த்தைகள் வாயிலாகவோ உரையாடும். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் எல்லா எண்ணங்களுக்கும் பின்னாலும் ஏற்படுவதில்லை.

எண்ணங்கள் பொதுவாக ஒரு இலக்கை மையப்படுத்தி தோன்றுகின்றன. நோக்கம் வேறுபடும் போதும், ஒவ்வொருவருக்கும் உள்ள அனுபவம் வித்தியாசமாக இருக்கும் போதும்,திறமையும் கல்வி அறிவும் வேறுபட்டு இருக்கும் போதும், ஆழ்மனதின் தேவைகள் மாறுபட்டு இருக்கும் போதும், உடல் மன நிலைகள் வெவ்வேறாக இருக்கும் போதும் எண்ணங்கள் வேறுபடுகின்றன. இதன் காரணமாக எல்லா விஷயங்களிலும் இரு வேறு நபர்கள் ஒரே மாதிரியாகச் சிந்திப்பது இல்லை. அதே நேரத்தில் பொதுவான குறிக்கோளை அடைவதற்கான முயற்சி எடுக்கும்போது பலருடைய எண்ணங்கள் ஒத்திருப்பதையும் காணலாம்.

நம் எண்ணங்களே நம்மை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் வெளிச்சமாகிறது. தரமற்ற எண்ணமுடையவர்கள் சமூகத்தின் பார்வையில் உயர்வானவர்களாகவோ சிறப்புகளுக்குத் தகுதியானவர்களாகவோ கருதப்படுவதில்லை. இதற்குக் காரணம் மனதின் எண்ணங்கள் எவ்வாறு இருக்கிறதோ அவ்வாறே நம் குணமும் அமைந்துவிடுகிறது.

நம் எல்லாச் செயல்களும் எண்ணங்களாலேயே தோன்றுகின்றன. எதேச்சையாக நடக்கும் செயல்களுக்கும் திட்டமிட்டுச் செய்யும் செயல்களுக்கும் இது பொருந்தும். எண்ணத்தின் உருவகமே செயல். மகிழ்வும் துக்கமும் எண்ணத்தின் வெளிப்பாடே.

மனதில் கொடிய, தீங்கிழைக்கும் எண்ணங்கள் ஒருவரைத் தீய செயலுக்கு உட்படுத்துகிறது. மனதில் எழும் எண்ணங்கள் தூய்மையாக, நல்லதாக இருக்குமேயானால் அவர் நற்செயல்கள் செய்கிறார் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

உன்னதமான குணம் ஒருவருக்குத் திடீரென ஏற்படுவதில்லை. மேலிருந்து கொடுக்கப்படுவதுமில்லை. எண்ணங்களை நெறிப்படுத்துவதாலும், கட்டுப்படுத்துவதாலும், வழிமுறைப்படுத்துவதாலும் உயர் எண்ணங்கள் தங்குகின்றன. தவறான, சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத எண்ணங்கள் மனதைவிட்டு ஒதுங்குகின்றன. மனமும் தூய்மை அடைகிறது.

எண்ணங்கள் தூய்மையாக இருக்கும் போது மகிழ்ச்சி நம்மைப் பின் தொடர்கிறது. நம் குணம் மற்றவர்களால் நம் வழித்தடங்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் கருதப்படுகிறது. சான்றோர் அவையில் நமக்கென தனி இடம் கிடைக்கும், போற்றப்படும். எனவே, மறுக்க முடியாத தேவை. அதன் தொடர்ச்சியாக, வளமிக்க நல்வாழ்விற்கு நல்ல சிந்தனைகள் நம் மனதில் எண்ணங்களாக நிலைக்க வேண்டும்.

(தினமணி)

## இந்தவார ராசிபலன் 25.01.2026 - 31.01.2026

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - தை 11
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சப்தமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் நன்மை தீமை கலந்த பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் கடுமையாக இருக்கும், சில இடங்களில் போராட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில மாற்றங்கள் வரலாம். ஆனால் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு லாபம் கிடைக்கும். புதிய முயற்சிகளுக்கு வெற்றி கரமான நேரம். உத்தியோகத்தில் இணக்கமான சூழ்நிலை இருக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக உயர்வான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வெற்றிகரமாக இருக்கும். சில இடங்களில் சவாலாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில உயர்வுகளை எதிர்பார்க்கலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தடையில்லாமல் நடக்கும். வியாபாரத்தில் பண வரவு அதிகமாக இருக்கும். புதிய திட்டங்களுக்கு சிறப்பான நேரம் இது. குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் விலகும், பிள்ளைகளால் மன மகிழ்ச்சி உண்டாகும். வேலை மாறுதல் சம்பள உயர்வு கிடைக்கும். சில வாய்ப்புகள் தள்ளி போகலாம்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் அதிகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் போராட்டமாக இருக்கும். சில இடங்களில் வேலையில் சவாலாக இருக்கும். உத்தியோகத்தில் சில மாறுதல்கள் வரலாம். ஆனால் எதிர்பார்த்த உத்தியோக உயர்வு தள்ளிப் போகலாம். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும். புதிய முதலீடுகளில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த மனச்சங்கடம் நீங்கும், பிள்ளைகளால் சில பிரச்சினைகள் வரலாம்.டும்பத்தில் இருந்த குழப்பங்கள் தீரும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை சுமையாக இருக்கும் . சில இடங்களில் சுவையாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி மாற்றம் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தடையில்லாமல் நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும். தொழிலை மேம்படுத்த தகுந்த நேரம். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் மறையும். பிள்ளைகளால் மன மகிழ்ச்சி உண்டாகும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் நன்மையான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை கடினமாக இருக்கும், சில இடங்களில் சுலபமாக இருக்கும். உத்தியோக ரீதியாக உயர்வும் செல்வாக்கும் கிடைக்கும், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தள்ளி போகலாம். வியாபாரத்தில் பொருள் வரவும் கையிருப்பும் அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் நிதானமாக ஈடுபடலாம். இடையூறுகள் நீங்கி உற்சாகம் பெருகும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக அதிகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை போராட்டமாக இருக்கும், சில இடங்களில் நேர்த்தியாக இருக்கும். உத்தியோக ரீதியாக சங்கடங்கள் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தடையில்லாமல் நடக்கும். விற்பனையும் வெற்றியும் பண வரவும் அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் கவனமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த சிரமங்கள் குறையும், பிள்ளைகளால் நிம்மதி உண்டாகும். வியாபாரத்தில் உயர்வும் பண வரவும் அதிகரிக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிதமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் அழுத்தம் இருக்கும் , சில இடங்களில் சவாலாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சற்று தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் அதிகரித்து அதிகரித்து பண வரவு முன்னேற்றமாக, மூலதனத்தை அதிகரிக்க தகுந்த நேரம் இது. பிள்ளைகளால் செலவுகள் வரலாம்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக மிதமான பலன்கள் இருக்கும். சில இடங்களில் வேலையில் அழுத்தம் இல்லாமல் இருக்கும், சில இடங்களில் சவாலாக இருக்கும். உத்தியோக ரீதியாக ஊதிய உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தடையில்லாமல் நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் வருமானமும் அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் எச்சரிக்கையாக ஈடுபடலாம். மன நிம்மதி கிடைக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக உயர்வான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் அழுத்தம் உண்டாகும், சில இடங்களில் பதட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில உயர்வு வரலாம், ஆனால் நினைத்த ஒரு காரியம் சற்று தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு வருமானம் அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். புதிய முதலீடுகளில் மிக எதிர்பார்ப்போடு இறங்கலாம்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக சிறப்பான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சோதனை உண்டாகும், சில இடங்களில் சாதனை இருக்கும். உத்தியோக ரீதியாக சில சிரமங்கள் வரலாம். ஆனால் எதிர்பார்த்த பதவி உயர்வு வேலை மாறுதல் தள்ளிப் போகலாம். வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கி மன அமைதி உண்டாகும், மருத்துவச் செலவு வரலாம்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிதமான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சவாலாக இருக்கும் , சில இடங்களில் பரபரப்பு நிறைந்ததாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி மாற்றம் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தாமதமாகலாம். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும், புதிய தொழிலில் நம்பிக்கையாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பம் விலகி அமைதி அதிகரிக்கும், பிள்ளைகளால் மன நிம்மதி உண்டாகும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக சிறப்பான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சவால் உண்டாகும் , சில இடங்களில் போராட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் உடனே நடக்கும். வியாபாரத்தில் பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும், தொழிலில் புதிய முதலீடுகளை போட்டு தைரியமாக இறங்கலாம். குடும்பத்தில் இருந்து வந்த மன கஷ்டம் விலகி குதூகலம் அதிகரிக்கும், பிள்ளைகளால் நிம்மதி பிறக்கும். வியாபாரத்தில் பண வரவு அதிகரிக்கும். பங்கு பரிவர்த்தனையில் இறங்க ஏற்ற நேரம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசா சமாதான சபை:

# டொனால்ட் ட்ரம்பின் தன்னகம்பாவத்துக்கு சேவை செய்வதற்கு ஒரு சர்வதேச அமைப்பு



வீரகத்தி தனபாலசிங்கம்

> ஒட்டுமொத்தத்தில் காசாவை மீளக்கட்டியெ முப்புவது என்ற போர்வையில் அமைக்கப்பட்டிருக்கும் சமாதான சபை சர்வதேச சட்டங்களை மீறுகின்ற ஒரு நபரின் தன்னகம் பாவத்துக்கு சேவைசெய்வதற்கான ஒரு சர்வதேச அமைப்பாகவே அமையப் போகிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது இரண்டாவது பதவிக் காலத்தின் முதலாவது வருடத்தில் முன்னெடுத்த கொள்கைகளும் நடவடிக்கைகளும் தேசிய மற்றும் சர்வதேசிய நடைமுறைகள் மற்றும் கடப்பாடுகள் மீதான அவரின் அலட்சியத்தை தெளிவாக காண்பித்தன. அவர் தொடக்கிவைத்த செயன்முறைகளும் கொள்கைகளும்

அமெரிக்காவை மாத்திரமல்ல, ஏனைய நாடுகளையும் பல தசாப்தங்கள் பின்னோக்கித் தள்ளிவிடும் ஆபத்தை தோற்றுவித்திருக்கின்றன. உலக ஒழுங்கு ஒன்று தலைகீழாக திருப்பப்படுகின்றது.

கடந்த மாத முற்பகுதியில் தென்னமெரிக்க நாடான வெனிசூலாவுக்குள் துருப்புக்களை அனுப்பி ஜனாதிபதி நிக்கலஸ் மதுரோவையும் அவரது மனைவியையும் அமெரிக்காவுக்கு கடத்திச் சென்றது சர்வதேச சட்டங்களை மீறிய செயல் என்ற சர்வதேச கண்டனங்களுக்கு நியூயோர்க் ரைம்ஸ் நேர்காணல் ஒன்றில் பதிலளித்த ட்ரம்ப், சர்வதேச சட்டம் தனக்கு தேவையில்லை என்றும் எந்தவொரு சர்வதேச சட்டத்துக்கும் நியமங்களுக்கும் கட்டுப்பட்டுச் செயற்பட வேண்டியது அவசியம் என்று தான் உணரவில்லை என்றும் கூறினார்.

இரண்டாவது உலகப் போருக்கு பின்னர் அமெரிக்காவும் சேர்ந்து உருவாக்கிய உலக ஒழுங்கின் நியமங்கள் தனது நாட்டுக்கு அநாவசியமான சுமையாக இருக்கின்றன என்றும் அவர் கூறினார்.

உண்மையில் சுமை என்று அவர் கூறியது ஐக்கிய நாடுகளை சபையையேயாகும். இரண்டாவது உலகப் போருக்கு பின்னர் போரின் கொடுமைகளில் இருந்து எதிர்காலச் சந்ததிகளை பாதுகாத்து மனித உரிமைகள் மீதான நம்பிக்கையை மீள உறுதிப்படுத்தவும் உடன்படிக்கைகள் மற்றும் சர்வதேச சட்டங்களில் இருந்து எழுகின்ற கடப்பாடுகள் மீதான மதிப்பையும் நீதியையும் பேணக்கூடிய ஒழுங்கு ஒன்றை நிறுவுவதற்காகவே 1945 ஒக்டோபரில் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. காலனித்துவ ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு சுதந்திமான அரசுகளாக வெளிக்கிளம்பிய அரசுகளுக்கு உதவுவதும் அதன் நோக்கங்களில் ஒன்றாகும்.

ஆனால், இப்போது ஐக்கிய நாடுகளின் அதிகாரம் போக்கிரித்தனமான தலைவர்களினாலும் அரசுகளினாலும் கடுமையான சோதனைக்கு உள்ளாக்கப்படுகிறது. ஏற்கெனவே தனது முதலாவது பதவிக் காலத்தில் (2016 - 2020) ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் உலக சுகாதார நிறுவனம் போன்ற பல்வேறு சர்வதேச நிறுவனங்களை அவமதித்த ட்ரம்ப் 'அமெரிக்காவுக்கு அநாவசியமான ஒரு சுமை" என்று தான் கருதும் ஐக்கிய நாடுகளை பலவீனப்படுத்தும் நோக்கிலான செயற்பாடுகளில் வெளிப்படையாகவே இறங்கியிருக்கிறார்.

நாடுகளின் வளங்களைச் சுரண்டுவதற்காக தான் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கின்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு தடையாக எந்த இடையூறும் வந்துவிடாதிருப்பதை உறுதிசெய்வதற்காகவே ட்ரம்ப் ஐக்கிய நாடுகளை மலினப்படுத்தும் வியூகங்களை முன்னெடுக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

டென்மார்க்கிற்கு சொந்தமான சுயாட்சிப் பிராந்தியமான கிறீன்லாந்து தீவை அமெரிக்காவுடன் இணைப்பதற்கான அவரது முயற்சிகள் காரணமாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் ஏற்பட்ட கடுமையான முரண்பாடுகளுக்கு மத்தியில் உலக பொருளாதார அமைப்பின் வருடாந்த உச்சிமகாநாட்டில் பங்கேற்பதற்காக சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகருக்கு சென்ற ட்ரம்ப் அங்கு 'சமாதான சபையை' கடந்த வியாழக்கிழமை (22) அங்குரார்ப்பணம் செய்து அதன் சாசனத்தையும் வெளியிட்டார்.




மத்திய கிழக்கில் காசா போரை முடிவுக்கு கொண்டுவந்து அந்த பள்ளத் தாக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கெனக் கூறிக்கொண்டு தனது திட்டத்தை கடந்த செப்டெம்பரில் அறிவித்த வேளையில்

சமாதான சபையை அமைக்கும் தனது யோசனையை முதன்முதலாக முன்வைத்த அவர் பிறகு அந்த சபையின் பணி காசாவுக்கு அப்பால் உலகின் ஏனைய மோதல்களுக்கும் முடிவைக்காணும் நோக்கத்துக்காக விரிவுபடுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார். தனது சமாதான சபையில் இணைந்து கொள்ளுமாறு உலக நாடுகளின் தலைவர்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி அழைப்பு விடுத்த அதேவேளை, அவரின் திட்டம் ஐக்கிய நாடுகளின் பணிகளுக்கு பாதகமாக அமையும் என்று இராஜதந்திரிகள் சமூகம் எச்சரிக்கை செய்தது.

டாவோஸ் நகரில் சமாதான சபையின் சாசனத்தை வெளியிட்டு வைத்து உரையாற்றிய ட்ரம்ப், ஐக்கிய நாடுகளை மலினப் படுத்தும் தனது நோக்கத்தை மறைக்கவில்லை. அங்குரார்பணக் கூட்டத்தில் அமெரிக்காவின் முக்கியமான பல நேச நாடுகள் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பங்குபற்றுவதை தவிர்த்த போதிலும், அவர், ஒவ்வொரு நாடும் சமாதான சபையில் அங்கம் வகிக்க விரும்புகின்றன என்றும் அது நாளடைவில் ஐக்கிய நாடுகளுக்கு போட்டியான அமைப்பாக மாற முடியும் என்றும் கூறினார். "இது அமெரிக்காவுக்கு அல்ல, உலகத்துக்கே உரித்தான அமைப்பு. காசாவில் நாம் வெற்றிபெற்றால் ஏனைய விவகாரங்களுக்கும் இதை விரிவுபடுத்த முடியும் என்று நான் நினைக்கிறேன்.'

இதுவரையில் 59 நாடுகள் சாசனத்தை ஏற்றுக்கொண்டு சமாதான சபையில் இணைந்திருப்பதாக ட்ரம்ப் கூறியிருக்கின்ற போதிலும், அங்குரார்பண நிகழ்வில் 19 நாடுகளின் பிரதிநிதிகள் மாத்திரமே பங்கேற்றனர். இந்தியா, ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகளின் தலைவர்களுக்கும் அவர் அழைப்புவிடுத்திருந்தார். அவரின் அழைப்பை ஏற்றுக்கொண்டு நிகழ்வில் கலந்து கொண்ட நாடுகளில் துருக்கி, சவூதி அரேபியா, இஸ்ரேல், பாகிஸ்தான் ஐக்கிய அரபு இராச்சியம், அசர்பைஜான், பரகுவே மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகள் குறிப்பிடத்தக்கவை. "நீங்கள் உலகில் மிகவும் பலம்பொருந்தியவர்கள் " என்று அந்த நாடுகளின் பிரதிநிதிகள் மத்தியில் அமெரிக்க ஜனாதிபதி கூறினார்.

போருக்கு பின்னர் காசாவை மீளக்கட்டியெழுப்பும் பணிகளை கண்காணிப்பதற்காக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை 2025 நவம்பரில் நிறைவேற்றிய தீர்மானத்தின் (2803) மூலமாக சமாதான சபைக்கு அதிகாரமளித்தது. பதவிக்காலம் புதுப்பிக்கப்படாத பட்சத்தில் 2027 டிசம்பர் 31 ஆம் திகதி வரை மாத்திரமே சமாதான சபை செயற்பட முடியும் என்று தெளிவான காலவரையறையை விதித்திருக்கும் அந்த தீர்மானம் சபையின் செயற்பாடுகள் குறித்து ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை பாதுகாப்பு சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கேட்டிருக்கிறது.

சுயமாகவே பதவிக் காலத்தை நீடித்து சமாதான சபை தவறான ஒரு முன்மாதிரியாக அமைந்து விடாதிருப்பதை உறுதி செய்வதற்காகவே இந்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ஆனால், அந்த சபை நிரந்தரமான அமைப்பு என்று ட்ரம்ப் கூறுகிறார். "மோதல்களினால் பாதிக்கப்படுகின்ற அல்லது அச்சுறுத்தப்படுகின்ற உலகின் பாகங்களில் உறுதிப்பாட்டை மேம்படுத்துவதையும் சட்டபூர்வமான ஆட்சிமுறையை நிலை நிறுத்துவதையும் நிலைபேறான சமாதானத்தை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு ' சர்வதேச அமைப்பு' என்று சமாதான சபையை அதன் சாசனம் வர்ணிக்கிறது.

சபையில் நிரந்தர உறுப்புரிமையைப் பெறுவதற்கு நாடுகள் 100 கோடி அமெரிக்க டொலர்களை கட்டணமாகச் செலுத்த வேண்டும் என்ற அறிவிப்பு உலக நாடுகளின் தலைவர்களையும் இராஜதந்திர சமூகத்தையும் அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது. கட்டணம் அறவிடுவது பற்றி பாதுகாப்பு சபையின் தீர்மானத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அமெரிக்காவின் மூலமுதல் திட்டத்தை ஐக்கிய நாடுகள் ஆதரித்த போதிலும், சமாதான சபையின் தற்போதைய கட்டமைப்பும் ஆணையும் அமெரிக்காவினால் தன்னிச்சையாக மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்பது வெளிப்படையானது. சாசனத்தில் காசாவைப் பற்றி எதுவும்

குறிப்பிடப்படவில்லை என்று அதன் உள்ளடக்கங்களை அந்தரங்கமாக அறிந்துகொண்ட முக்கியமான சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

சமாதான சபையின் தலைவராக ட்ரம்ப் தன்னை நியமித்திருக்கிறார். அதன் நிறைவேற்றுக்குழு அவரின் குடும்பத்தவர்களினாலும் முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் போன்ற நண்பர்களினாலும் நிரப்பப்பட்டிருக்கிறது. சர்வதேச இராஜதந்திர செயற்பாடுகளுக்கான பிரதான

சர்வதேச நிறுவனமாக ஐக்கிய நாடுகளுக்கு இருக்கும் அந்தஸ்தை சூழ்ச்சித்தனமாக அபகரிக்கும் நோக்குடனான வாசகங்கள் சமாதான சபையின சாசனத்தில் காணப்படுகின்றன.

இந்த சபை பாலஸ்தீன நிபுணர்களை நியமிக்கும் என்ற போதிலும், பாலஸ்தீன தலைவர்கள் உள்ளடக்கப்படாமல் இருப்பது பாலஸ்தீனத்தை அங்கீகரித்த நாடுகளை திட்டமிட்டு அவமதிக்கும் ஒரு செயலாகும். பாலஸ்தீனர்களை இனப்படுகொலை செய்ததாக ஐக்கிய நாடுகளின் அமைப்புக்களினால் குற்றஞ்சாட்டப்படுகின்ற இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகு சமாதான சபையில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற அதேவேளை, பாலஸ்தீன ஜனாதிபதி முஹம்மட் அப்பாஸ் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார். இதன் விளைவாக, பாலஸ்தீனத்தின் எதிர்காலம் குறித்து ட்ரம்ப் எடுக்கும் அடாத்தானதும் நியாயப்பாடு இல்லாததுமான தீர்மானங்களுக்கு உறுப்பு நாடுகள் இணக்கத்தை தெரிவிக்கக்கூடிய ஆபத்து இருக்கிறது.

இது இவ்வாறிருக்க, சமாதான சபையின் இலச்சினையும் கூட, முழுமையாக ட்ரம்புக்கு விருப்பமான தங்கத்தின் நிறத்தில் வடிவமைக்கப்பட்டிருப்பதையும் அமெரிக்க வரைபடத்தை கொண்டிருப்பதையும் தவிர, மற்றும்படி தோற்றத்தில் ஐக்கிய நாடுகளின் இலச்சினையை ஒத்ததாகவே இருக்கிறது.

ஒட்டுமொத்தத்தில் காசாவை மீளக்கட்டியெழுப்புவது என்ற போர்வையில் அமைக்கப்பட்டிருக்கும் சமாதான சபை சர்வதேச சட்டங்களை மீறுகின்ற ஒரு நபரின் தன்னகம்பாவத்துக்கு சேவைசெய்வதற்கான ஒரு சர்வதேச அமைப்பாகவே அமையப்போகிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனத்துவ பிரச்சினைகளுக்கு இப்போது தீர்வுகள் தேவை



கலாநிதி ஜெகான் பெரேரா

முன்னைய எந்தவொரு ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ வடக்கிற்கு விஜயம் செய்திராத அளவுக்கு ஜனாதிபதி அநுரா குமார திசநாயக்க பதினைந்து மாதகால இடைவெளியில் பல தடவைகள் அங்கு விஜயங்களை மேற்கொண்டிருக்கிறார். அவர் அந்த விஜயங்களுக்காக விமானங்களை பயன்படுத்தவும் இல்லை. யாழ்ப்பாணத்துக்கான தனது மிகவும் அண்மைய விஜயத்தை அவர் கடந்த வாரம் தைப்பொங்கலை முன்னிட்டு அறுவடையையும் புதிய வருடத்தின் பிறப்பையும் கொண்டாடுவதற்காகவே மேற்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் செலவிட்ட இரு நாட்களின் போதும் ஜனாதிபதி திசநாயக்க தேசிய வீடமைப்பு திட்டத்தை ஆரம்பித்து வைத்ததுடன் பலாலி விமான நிலையத்தை விஸ்தரித்து புனர்நிர்மாணம் செய்வதற்கும் காங்கேசன் துறை துறைமுகத்தின் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்குமான திட்டங்களை அறிவித்தார். அத்துடன் நாட்டில் மீண்டும் இனவாதத்துக்கு இடமில்லை என்ற உறுதிமொழியையும் அவர் வழங்கினார்.

வடக்கில் ஜனாதிபதியின் தொடர்ச்சியான பிரசன்னம் நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இனவாதத்தை அவர் நிராகரித்திருப்பதும் இன, மத சிறுபான்மைச் சமூகங்களுடன் திறந்த மனதுடன் ஊடாட்டங்களைச் செய்வதில் காட்டுகின்ற ஆர்வமும் ஒரு இனவாத தலைவராக அன்றி தேசியத் தலைவராக ஏற்புடைமையை அவர் பெறுவதற்கு உதவியிருக்கின்றன.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றதற்கு பின்னரான கடந்த பதினைந்து மாதங்களில் இனங்களுக்கு இடையில் குறிப்பிடத்தக்கதாக எந்தவொரு மோதலும் இடம்பெறவில்லை. நீண்ட இனப்பதற்ற வரலாற்றைக் கொண்ட ஒரு நாட்டில் ஒப்பீட்டளவிலான இந்த அமைதி தற்செயலானதல்ல. இந்த நிலைவரம் இன உணர்வுகளை தூண்டுவதை விடுத்து குறைப்பதற்கு அரசியல் உணர்வுடனான தெரிவு ஒன்று செய்யப்பட்டிருக்கிறது என்பதை பிரதிபலிக்கிறது.

ஆனால், புதிய பிரச்சினைகள் தோன்றாமல் தடுப்பது ஆட்சிப்பணியின் ஒரு பகுதி மாத்திரமே. ஜனாதிபதி திசநாயக்கவின் தலைமையிலான அரசாங்கம் அதன் கண்காணிப்பின் கீழ் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்யும் பொறுப்பை ஏற்றிருக்கின்ற அதேவேளை, முன்னைய அரசாங்கங்களின் காலத்தில் இருந்து தொடருகின்ற நீண்டகால இனத்துவ மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவும் அதேயளவு பொறுப்பை இன்னமும் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த பிரச்சினைகள் பல தசாப்தங்களாக நீடித்துவருகின்றவை என்ற காரணத்நதால் சமாளிக்கக் கூடியவையாக தோன்றக்கூடும். இருந்தாலும், அந்த பிரச்சினைகள் தொடர்ந்து நீடிப்பது அவை தீங்கற்றைவை என்று அர்த்தமாகிவிடாது. மேற்பரப்பிற்கு கீழே அவை அரசு மீதான நம்பிக்கையை தொடர்ந்தும் பலவீனப்படுத்துவதுடன் நீதியை வழங்குவதில் அரசுக்கு இருக்கக்கூடிய ஆற்றல் மீதான நம்பிக்கையையும் படிப்படியாக இல்லாமல் செய்துவிடும்.

வெறுமனே நோக்கங்கள் அல்ல, விளைவுகளை ஏற்படுத்துவதற்கான பொறுப்பே ஆட்சிமுறையின் மையக் கோட்பாடாகும். எந்தவொரு அரசாங்கமும் பிரச்சினைகள் எதுவும் இல்லாமல் புத்தம்புதிதாக தொடங்குவதில்லை. அரசாங்கங்கள் தீர்வு காண்பதற்கு விருப்பமான பிரச்சினைகளையே தெரிவுசெய்யவும் முடியாது. தீர்வு காணப்படாத சகல தகராறுகள், அநீதிகள் மற்றும் பிரச்சினைக்குரிய மரபுகளுடனுமே அரசை அரசாங்கங்கள் பொறுப்பேற்கின்றன.

இவையெல்லாம் வேறு எவருடையதோ பிரச்சினைகள் என்று வாதிடுவது அரசியல் ரீதியில் சௌகரியமானது. ஆனால், நிறுவன ரீதியில் ஆபத்தானது. தீர்வு காணப்படாத பிரச்சினைகள் மிகவும் அசௌகரியமான தருணங்களில் குறிப்பாக, அரசாங்கம் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்ததுவதற்கு முயற்சிக்கும்போது அல்லது பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்த முயற்சிக்கும் போது வெளிக்கிளம்பும் இயல்பைக் கொண்டவை.


போர்காலத்தில் அரசாங்கத்தினால் கைதுசெய்யப்பட்ட ஆண்களும் பெண்களும் அனுபவித்ததாகக் கூறப்படும் பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் பற்றிய அக்கறை கடந்த வாரம் ஜெனீவாவில் மீண்டும் வெளிப்படுத்தப்பட்டபோது இந்த யதார்த்தத்தை காணக்கூடியதாக இருந்தது. இந்த பிரச்சினை சர்வதேசத்தின் கவனிப்பில் இருந்து அகன்றுவிட்டது என்ற எந்த உணர்வையும் கடந்தவாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் 'இலங்கை மோதலுடன் தொடர்புடைய பாலியல் வன்முறை குறித்த அறிக்கை' என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கை அகற்றிவிட்டது.

இத்தகைய அறிக்கைகள் ஒரு வெற்றிடத்தில் இருந்து வெளிக் கிளம்புவதில்லை. குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்து பொறுக்கூறலை உறுதிசெய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரத்தை செய்வதற்கான நம்பகத்தன்மையான உள்நாட்டுச் செயன்முறை இல்லாத நிலையிலேயே இந்த அறிக்கைகள் வெளியிடப்படும் சூழ்நிலை உருவாகிறது. அவை சர்வதேச எண்ணங்களை வடிவமைப்பதுடன் இராஜதந்திர உறவுகளில் செல்வாக்கை செலுத்துகின்றன. அதனால் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெறுவதற்கான வாய்ப்புக்கள் பாதிக்கப்படுகின்றன.

தீர்த்துவைக்கப்படாத ஏனைய கடந்தகாலப் பிரச்சினைகள் தொடர்ந்து புரையோடுகின்றன. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள், போர்க்காலத்தில் இராணுவத்தினால் சுவிகரிக்கப்பட்ட குடிமக்களின் காணிகளை திருப்பிக் கையளிக்கத் தவறியமை மற்றும் காணாமல் போன ஆயிரக் கணக்கானவர்களின் கதி குறித்து அவர்களின் குடும்பத்தவர்கள் இன்னமும் பதில் வேண்டி நடத்தும் போராட்டம் போன்றவை இந்த பிரச்சினைகளில் அடங்கும்.



**என்னதான் அபிவிருத்தி திட்டங்களை சிறந்த முறையில் வடிவமைத்தாலும், தீர்க்கப்படாத இனத்துவ மனக்குறைகளும் கவனிக்கப்படாத போர்க்கால துஷ்பிரயோகங்களும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை கவனிப்பதில் அசமத்துவமான அணுகுமுறையும் இறுதியில் அவற்றை மலினப்படுத்திவிடும்.**



அவை தற்போது மைய அரங்கில் இல்லாவிட்டாலும் கூட, கவனம் செலுத்தாமல் இருக்கக்கூடிய பிரச்சினைகள் அல்ல. அவை நிஜவாழ்க்கையையும் முழுச் சமுதாயங்களையும் பாதிக்கின்றன. அவற்றின் ஒட்டுமொத்த தாக்கம் வழமை நிலையை ஏற்படுத்துவதற்கும் பொது நிறுவனங்கள் மீதான நம்பிக்கையை மீளக்கட்டியழுப்புவதற்குமான முயற்சிகளை மலினப்படுத்துகிறது.

தாமதித்தால் பெரிய பிரச்சினைக்குரியதாக மாறக்கூடிய இன்னொரு விவகாரம் அண்மைய சூறாவளியினால் நாட்டில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட மத்திய மலைநாட்டில் மலையக தமிழ்ச் சமூகத்தவர்களின் மீள் குடியேற்றமாகும். ஜனாதிபதி திசநாயக்க யாழ்ப்பாணத்தில் மக்களின் வரவேற்புக்கு மத்தியில் தைப்பொங்கலை கொண்டாடிய வேளையில் கூட, மலையக தமிழர்கள் தீர்வுகாணப்படாமல் இருக்கும் தங்களது பிரச்சினைகள் மீது கவனத்தை ஈர்ப்பதற்கான அமைதிவழி இயக்கங்களை முன்னெடுத்தனர்.

அவர்களில் பெருமளவானவர்கள் கொழும்பில் லிபேர்ட்டி சுற்றுவட்டத்தில் தைப்பொங்கலை அடையாளபூர்வமாக கொண்டாடுவதற்காக திரண்ட அதே வேளை, தங்களது பிரச்சினைகள் குறிப்பாக, சூறாவளியின் விளைவான இடம்பெயர்வு தொடர்பிலான பிரச்சினை மீது தேசிய கவனத்தை ஈர்க்கும் செயற்பாடுகளையும் முன்னெடுத்தனர்.

சூறாவளியின் தாக்கமும் காலநிலை மாற்ற சூழ்நிலைகளின் கீழ் எதிர்காலத்திலும் அத்தகைய அனர்த்தங்கள் நேரக்கூடிய சாத்தியங்களும் இடம் பெயர்ந்த மலையக தமிழ் மக்களுக்கு புதிய வாழ்விடங்களை தேடிக்கண்டுபிடிக்க வேண்டிய அவசியத்தை தோற்றுவித்திருக்கின்றன. அவர்களுக்கு நிலமில்லாத பிரச்சினையை விரிவான முறையில் கையாளுவதற்கு இது ஒரு சந்தர்ப்பமாகவும் அமைகிறது.

வேறு இடங்களில் அவர்களை குடியமர்த்துவதற்கான திட்டமிடலும் வீடுகளை அமைத்துக் கொடுப்பதும் நல்ல ஆட்சிமுறையாகும். இதை துரிதமாகச் செய்ய வேண்டியது அவசியமாகும். காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய அனர்த்தங்கள் அரசியல் நேர அட்டவணைகளை மதிப்பதில்லை. தாமதத்தையும் தீர்மானங்களை எடுப்பதில் உள்ள தயக்கத்தையும் அந்த அனர்த்தங்கள் தண்டித்து விடுகின்றன. முறைமை மாற்றத்தைப் பற்றி பெருமையாகப் பேசுகின்ற ஒரு அரசாங்கம் அத்தகைய சவால்களை தற்காலிக தீர்வுகள் மூலமாக சமாளித்துவிடமுடியாது.

மலையக தமிழ் மக்களை மீள்குடியேற்றுவதற்கு புதிய இடங்களைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் பெருந்தோட்டக் கம்பனிகளிடம் இருந்து காணிகளை எடுப்பதற்கு வழிவகுக்கும் என்று அரசாங்கம் யோசிக்கின்றது போன்று தெரிகிறது. அந்த கம்பனிகள் தாக்குப்பிடிப்பதற்கு ஏற்கெனவே போராடிக் கொண்டிருக்கின்றன. 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வங்குரோத்து நிலைக்குப் பின்னர் நாடு எதிர்நோக்குகின்ற பொருளாதார நெருக்கடியின் விளைவாக, தோட்டக் கம்பனிகளின் உரிமையாளர்களின் தேவைகளை அரசாங்கம் அக்கறையுடன் கவனித்துவருகிறது.

அதன் விளைவாக , நிலப்பயன்பாட்டை குறைப்பதற்காக உயர்ந்த தொடர்மாடி வீடமைப்பு மற்றும் நகரக் குடியிருப்புகள் போன்ற தீர்வுகள் குறித்து அரசாங்கம் சிந்திக்கின்றது. அத்தகைய தீர்வுகள் பாதிக்கப்பட்ட மக்களுடன கலந்தாலோசித்து அவர்களது பாதுகாப்பு, வாழ்வாதாரங்கள் மற்றும் சமூக உறுதிப்பாடு ஆகியவற்றைக் கையாளக்கூடிய விரிவான மூலோபாயத்துக்கான பதிலீடாக ஒருபோதும் அமைந்துவிடாது.

முறைமை மாற்றத்தைக் கொண்டுவரும் என்ற நம்பிக்கையில் தான் கடந்த தேர்தல்களில் பெரும்பாலான மக்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு வாக்களித்தார்கள். பழைய முறைமை பிரதிநிதித்துவப்படுத்திய அதே வழிமுறைகளை தொடருவதற்கு அரசாங்கத்துக்கு அவர்கள் வாக்களிக்கவில்லை. அடிப்படையில் முறைமை மாற்றம் என்பது முன்னுரிமை கொடுக்க வேண்டிய விடயங்களில் ஒரு சமநிலையை பேணுவதாகும். சமூகநீதி இல்லாத பொருளாதாரத் திறன் குறுகிய காலத்துக்கு பயன் தரும் என்றாலும் நீண்டகால அடிப்படையில் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதை ஏற்றுக்கொள்வதே அதன் அர்த்தமாகும்.

என்னதான் அபிவிருத்தி திட்டங்களை சிறந்த முறையில் வடிவமைத்தாலும், தீர்க்கப்படாத இனத்துவ மனக்குறைகளும் கவனிக்கப்படாத போர்க்கால துஷ்பிரயோகங்களும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை கவனிப்பதில் அசமத்துவமான அணுகுமுறையும் இறுதியில் அவற்றை மலினப்படுத்திவிடும். கடினமான தீர்மானங்களை பின்போடும் ஆட்சிமுறை நேரத்தை இழுத்தடிக்க உதவலாம், ஆனால் நம்பிக்கையை இல்லாமல் செய்துவிடும்.

அதனால், எதிர்வருடம் தீர்க்கமானதாக அமையப் போகிறது. இனவாதமின்மை மற்றும் சகல சமூகங்களையும் அரவணைக்கும் அணுகுமுறை மீதான அதன் பற்றுறுதி மோதல்களை தவிர்ப்பதற்கு அப்பால் மோதல்களுக்கு தீர்வுகளை காண்பதற்கு விஸ்தரிக்கப்படுவதாக அரசாங்கம் காண்பிக்க வேண்டியது அவசியமாகும்.

நீண்டகாலத் தடுப்புக்காவல், குடிமக்களிடம் காணிகளை திருப்பிக் கையளிப்பதில் தாமதம், ஆட்கள் காணாமல் போனதற்கு பொறுப்புக்கூறல் மற்றும் இடம்பெயர்ந்த சமூகங்களை கௌரவமான முறையில் மிள்குடியமர்த்துதல் உட்பட மோதலுடன் தொடர்புடைய துஷ்பிரயோகங்களை கையாளுவது அரசாங்கத்தின் செயற்திட்டத்தில் இருந்து விலகலாக அமையாது. அவை அந்த செயற்திட்டத்தின் மைய அம்சங்களாகும். மெய்யான மாற்றத்தில் பற்றுறுதி கொண்ட ஒரு அரசாங்கம அது ஆட்சிப்பொறுப்பை கையேற்றபோது இருந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காணவேண்டும். இல்லாவிட்டால, இணக்கத்தீர்வை வேண்டிநிற்கும் அந்த பிரச்சினைகளுக்குள் அமிழ்ந்துவிடும் ஆபத்து இருக்கிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர குமரவை மையப்படுத்தி தமிழரை குறிவைக்கிறது இனவாதம்!

# சிறீதரனை இலக்கு வைத்து தமிழரசை அழிக்கிறது இனபாசம்!

- பனங்காட்டான்

ஜனாதிபதி அநுர குமர திஸ்ஸ நாயக்க யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய ஓர் உரையின் ஒரு சிதறலும், தமிழரசுக் கட்சியின் மூத்த எம்.பியான சிவஞானம் சிறீதரனின் நாடாளுமன்ற செயற்பாடுமே இப்போது பிரதான பேசுபொருட்களாகியுள்ளன.

யாழ்ப்பாணத்தின் பொதுநிகழ்ச்சிகளில் பங்கேற்ற ஜனாதிபதி அநுர குமர பொதுநிகழ்வொன்றில் கலந்து கொள்ளும்போது யதார்த்தமான கருத்தொன்றை தெரிவித்தார். இது தமிழர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது. ஆனால் சிங்கள தேசத்தின் பௌத்த பக்தர்கள் இதனை இப்போதைக்கான தங்கள் ஆயுதமாக எடுத்துள்ளனர். அநுர குமர சொன்னது இதுதான்:

போயா நாட்களில் சிலர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கின்றனர். ஜெய சிறீமகாபோதியை கடந்து இவர்கள் இங்கு செல்வது தங்கள் மதவழிபாட்டுக்காக அல்ல. மாறாக, வெறுப்பை பரப்புவதற்காகவே - என்பதுதான் அநுர குமர சொன்னது.

தென்னிலங்கையின் பல பகுதிகளிலும், யாழ்ப்பாணம் செல்லும் பாதையிலும் பல பௌத்த விகாரைகள் உள்ளன. இவைகளுள் சில வரலாற்றுப் பெருமை பெற்றவையாக அறிவிக்கப்பட்டவை. போயா தினங்களில் இங்கு சிறப்பு வழிபாடு இடம்பெறும். இப்படியிருக்க, எதற்காக தெற்கிலிருந்து யாழ்ப்பாணம் செல்ல வேண்டுமென்ற அநுர குமரவின் கேள்வி நியாயமானது.

**போயா தினத்தில் சில் அனுஷ்டிப்பதற்கு யாழ்ப்பாணம் செல்ல வேண்டியதில்லை என்ற அநுர குமரவின் கூற்றை இனவாதிகள் ஆயுதமாக எடுத்துள்ளனர். சிறீதரன் மீது தமிழரசுக் கட்சி எடுத்திருக்கும் நடவடிக்கையை தங்களுக்கான பலமாக எடுத்து கட்சியை அழிக்க முயற்சிக்கின்றனர் இனபாசத்தால் உள்நுழைந்தவர்கள்.**

திஸ்ஸ விகாரையில் காணி பிரச்சனை போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் போயா தின வழிபாட்டை காரணம் காட்டி தெற்கிலிருந்து செல்வதால் பிரச்சனை பூதாகரமாவதை கருத்தில் கொண்டே அநுர குமர தமது கருத்தை நாட்டின் தலைவர் என்ற வகையில் ஒருதலைப் பட்சமின்றி கூறியிருக்கலாம். இது மதத்தை முன்னிறுத்தி அரசியல் செய்ய விரும்புவர்களுக்கு அவலாகக் கிடைத்துள்ளது.

(1983 யூலை தமிழின அழிப்பு ஒரு போயா தினத்துக்கு மறுநாள் ஆரம்பிக்கப்பட்டது. தமிழரை கொலை செய்யவென திட்டமிடப்பட்ட நாள் இது. அப்போது அமைச்சராகவிருந்த சௌமிய தொண்டமான் இதுபற்றிக் குறிப்பிடுகையில் - போயா நாளில் சில், அடுத்த நாள் கொல் - என்று சொன்னது இவ்வேளையில் ஞாபகத்துக்கு வருவதை தவிர்க்க முடியவில்லை.)


இனப்பிரச்சனையை வளர்க்கும் இடமாக அநுர குமர சிங்கள மக்களைப் பார்த்துச் சொன்னதை இனவாதத்தை வளர்க்கும் தூபமாக சிங்கள அரசியல்வாதிகள் கையில் எடுத்துள்ளனர். சிங்கள - பௌத்த வாக்குகளால் பதவிக்கு வந்துவிட்டு வடக்குக்கு சென்று அந்த சிங்கள பௌத்த மக்களை ஜனாதிபதி காட்டிக் கொடுக்கிறார் என்று குரல் எழுப்பியுள்ளார் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர. கடற்படையில் உயர் அதிகாரியாக முன்னர் கடமையாற்றிய இவர், கோதபாய ஜனாதிபதியாக இருந்தபோது அவரைச் சுற்றியிருந்த வியத்மக குழுவின் பிரதானியாகவிருந்து கோதபாயவின் அழிவுக்குக் காரணமாகவிருந்தவர்களில் முக்கியமானவர்.


விகாரை விடயங்களில் தலையிட முனைந்தால் என்ன நடைபெறும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டி வருமென்று எச்சரித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. கண்டியில் மகாநாயக்கர்களை சந்தித்துவிட்டு வெளியே வந்த இவர் தாம் இப்போது அரசியலில் இல்லையென்று கூறியிருப்பது விநோதமானது.

மகிந்த ராஜபக்சவின் மகன் நாமல் பேபி கூறியுள்ள கருத்து அவரது வரலாற்று அறிவின்மையை காட்டுகிறது. தமிழ் மக்கள் கதிர்காமத்துக்குச் செல்ல உரிமை இருப்பதுபோல சிங்கள் மக்களுக்கு வடக்கிலுள்ள நாகதீப விகாரைக்குச் செல்ல உரிமை உள்ளது என்று எச்சரித்துள்ளார். கதிர்காமத்தின் மூலத்தில் வேல் இருப்பதையும், இது தமிழர்களின் வழிபாட்டுத் தலம் என்பதையும் மறைக்க எத்தனிக்கும் நாமல் இலங்கையின் எதிர்கால ஜனாதிபதியாக வர கனவு காணும் ஓர் இனவாதி.

இவ்வாறான இனவாதம் கக்குபவர்களுக்கு திஸ்ஸ விகாரை ஓர் ஆயுதமாக மாறாது பார்த்துக் கொள்ள வேண்டியது ஆட்சித் தலைவரான அநுர குமரவின் பாரிய பொறுப்பு. அவரின் ஒரு சொல்லே இனவாதத்தை கக்க ஆரம்பித்துள்ளது என்ற காரணத்தைக் கூறி திஸ்ஸ விகாரை விடயத்தில் நியாயமாகவும் நீதியாகவும் நடந்து கொள்வதை அவர் தவற விடக்கூடாது என தமிழ் மக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றனர்.

தெற்கின் இனவாதத்துக்கு நிகரான பதவிமோகப் போராட்டம் ஒன்று இனபாசம் என்ற பெயரில் இப்போது வேகம் கொண்டுள்ளது. தமிழரசுக் கட்சியின் மூத்த எம்.பியும் நாடாளுமன்ற குழுத்தலைவருமான சிவஞானம் சிறீதரனை மையப்படுத்தியதாக இந்த நடவடிக்கை பல கோணங்களாலும் மேற்கொள்ளப்படுகிறது.





நாடாளுமன்ற அரசமைப்புச் சபையில் சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதியாக இடம்பெற்றிருக்கும் சிறீதரன் அரச சார்பாளராக செயற்படுவதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார். இதுவரை நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டில் நிறுத்தப்பட்டிருக்கும் இவரை அப்பதவியிலிருந்து விலகுமாறு தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் கடிதம் மூலம் கேட்டுள்ளார். இவ்விடயம் பற்றி ஏற்கனவே இப்பத்தியில் குறிப்பிடப்பட்டது.

தமக்குக் கிடைத்த இக்கடிதத்துக்கு பதில் எழுதும் கடப்பாடு சிறீதரனுக்கு இல்லை. அரசமைப்புச் சபைக்கு இவரை தமிழரசுக் கட்சி நியமிக்கவில்லை. நாடாளுமன்றத்திலுள்ள சிறுபான்மைக் கட்சிகளே இவரைத் தெரிவு செய்தன. எனவே இவர் கட்சியின் கடிதத்துக்கு பதில் அனுப்பாவிட்டால் இவர் மீது நடவடிக்கை எடுக்கும் தார்மிக உரிமை கட்சிக்கு இல்லையென்று கட்சியின் பிரமுகர்களே கூறுகின்றனர். தமிழரசின் பதில் தலைவரின் நிலைப்பாடும் இதுவே என்று நம்பிக்கையானவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே நாடாளுமன்றத் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டு, கட்சியின் தலைவர் பதவிப் போட்டியில் கட்சி உறுப்பினர்களாலேயே தூக்கி வீசப்பட்டு, வன்னி சத்தியலிங்கத்தின் கருணையால் பதில் செயலாளராகியுள்ள சுமந்திரன் எப்பாடுபட்டாவது சிறீதரனை பழிவாங்க எடுக்கும் முயற்சியில் இப்போது கையில் கிடைத்திருப்பது அரசமைப்புச் சபை விவகாரம் என்று மார்ட்டின் வீதி அலுவலகத்தின் மூத்தவர் ஒருவர் தமது சகபாடிகளிடம் தெரிவித்து வருகிறார்.

தமிழரசுக் கட்சியோடு மீண்டும் இணைய விரும்பியிருக்கும் ஜனநாயக தமிழர் கூட்டணியின் பேச்சாளரான சுரேஸ் பிரேமச்சந்திரனும் சிறீதரன் மீது குற்றப்பத்திரிகையை வாசித்துள்ளார். தெற்கில் பலவேறு கட்சிகளிலும் இணைந்து வெளியேறியும் - வெளியேற்றப்பட்டும் அலைந்து திரியும் மகிந்தவின் முன்னாள் சகபாடியான தயாசிறி ஜெயசேகரவும் சிறீதரன் மீது ஏறிப்பாய்ந்துள்ளார். சுமந்திரன் சிறீதரன் மீது வைத்த குற்றச்சாட்டையே இருவரும் பகிரங்கமாகக் கூறுகின்றனர்.

எதிரணியினர் சார்பில் தயாசிறி ஜெயசேகர தமது தாக்குதலை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறார்.

இங்கு கவனிக்கப்பட வேண்டிய இரண்டு விடயங்கள் முக்கியமானவை. சிறீதரனை விமர்சிக்கும் சுரேஸ் பிரேமச்சந்திரன் பல தேர்தல்களில் மக்களால் நிராகரிக்கப்பட்டவர். அண்மையில் இடம்பெற்ற உள்ளாட்சிச் சபைத்தேர்தலில் தமிழரசுக் கட்சியை எதிர்த்து இன்னொரு கூட்டில் இணைந்து பரப்புரை மேற்கொண்டவர். கருணைக் கொலையில் அகப்பட்டிருக்கும் மாகாணசபைக்கான தேர்தலை நடத்தினால் அதனூடாக தமது ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கு சில ஆசனங்களாவது பெறலாம் என்ற நப்பாசையில் இப்போது தமிழரசுடன் தற்காலிகமாக இணைந்திருப்பவர்.

தயாசிறி ஜெயசேகர எப்போதுமே சிங்கள கட்சிகளின் பிரதிநிதியாக இருந்தவர். மகிந்த ராஜபக்ச ஆட்சியிலும் மைத்திரிபால சிறிசேன ஆட்சியிலும் முக்கிய பங்காற்றியவர். சிங்கள ஆட்சிகள் தமிழின படுகொலைகளை மேற்கொண்டபோது இராணுவத்தின் பக்கமும் சிங்கள கட்சிகளின் பக்கமும் நின்றவர். இப்போது தமிழினத்தை இராணுவத்திடமிருந்து காப்பாற்றுவதுபோல வேசம் காட்டி சிறீதரனை அரசமைப்புச் சபையிலிருந்து விலகுமாறு கோரி வருகிறார். இது தொடர்பான இவரது உரைகளை எழுதிக் கொடுப்பவர் யாராக இருக்கலாம் என்ற ஊகம் அண்மையில் தமிழ் ஊடகம் ஒன்றில் நாசூக்காக தெரிவிக்கப்பட்டது.

இவ்விடத்தில் முக்கியமாக எழும் கேள்வியொன்று இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியது. தமிழரசுக் கட்சியின் உள்வீட்டுப் பிரச்சனை பற்றி தமிழர் பகுதியிலுள்ள அநுர குமரவின் முக்கியஸ்தர் ஒருவர் பிரஸ்தாபித்திருந்தார். இது தொடர்பாக கட்சியின் பதில் தலைவரான சி.வி.கே.சிவஞானம் அவர்கள் அவசரமாக ஊடகவியலாளர்களைச் சந்தித்து மிகச்சூடான ஒரு கருத்தை நியாயமாக வெளியிட்டிருந்தார். தமிழரசுக் கட்சியின் உட்கட்சி விவகாரங்களில் தலையிட எவருக்கும்

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்துடனான உறவு கானல் நீராகிறதா?

நியூசிலாந்துசிற்சபேசன்

"உப்புக்கரிக்கும் கடல் நம்மைப் பிரித்தாலும், பொதிகை மலையிலிருந்து வீசுகின்ற தென்றல் சற்றுவேகமாக வீசினால், ஈழவளநாட்டிலே எங்களையும் கொஞ்சித் தாலாட்டும்" என ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டிலே சொல்லின் செல்வர் செல்லையா இராசதுரைஉருகினார்.

இந்தியா- இலங்கை தமிழரின் பிணைப்பு புவியியல் ரீதியானது மட்டுமல்ல. உணர்வுபூர்வமானதுமாகும்.

அதற்கு, முதலமைச்சர் எம் ஜி இராமச்சந்திரன் தலைமையில் 1981ல் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் நிறைவுவிழா மேடையும் சாட்சியாகும். பிரதமர் இந்திராகாந்தியுடன், அ. அமிர்தலிங்கம், சௌ. தொண்டமான், செ.இராசதுரை உள்ளிட்ட தலைவர்களும் மேடையை அலங்கரித்திருந்தனர். அஃது, உணர்வுபூர்வமான தொடர்பாடலையும் வெளிப்படுத்தியது.

இந்தியா- இலங்கை தமிழருடைய தொடர்பாடல் அரசியல்வாதிகளுடன் மட்டுப்படுத்தப்படவில்லை. அறிஞர்கள், சமூகப் பெரியார்கள், சமயப் பிரமுகர்கள், கல்வியாளர்கள் என பல்வேறு நிலைகளிலும் பரந்துவிரிந்ததாகக் காணப்பட்டது.

அரசியல்வாதிகளுடனான தொடர்பு கட்சி வேறுபாடுகளைக் கடந்ததாக வேகாணப்பட்டது. அத்துடன், அஃது தலைவர்கள் மட்டத்திலான தொடர்பாக சுருங்கிவிடவில்லை. வெவ்வேறு மட்டங்களிலும் உள்ளவர்களுடனும் தொடர்பு பேணப்பட்டது.

அத்தகைய தொடர்பு இன்று நேற்று ஏற்பட்டதல்ல.

கொடுக்கல் - வாங்கல் இருந்தது. பிச்சல் -பிடுங்கல் இருந்தது. ஆனால், அவை எதுவும் அத்துமீறவில்லை. மூன்றாம் தரப்பு மூக்கை நுழைக்கவேண்டிய தேவை ஏற்படவில்லை. அதனால், அன்னியோன்யமாகவே உறவைப் பேணிக்கொள்ளமுடிந்தது.

இலங்கைத் தமிழரைப் "பிறத்தியாராக" தமிழகம் கருதியதேயில்லை.

சைவசமயத்திலேஅறுபத்திமூன்றுநாயன்மார்கள் என்றுகொண்டாடப்படுவோரில்,ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த,திருஞானசம்பந்தர் முதன்மையானவராகும். திருக்கேதீஸ்வரம் மற்றும் திருக்கோணேஸ்வரத் தலங்கள் குறித்துத் தேவாரப் பதிகங்களைப் பாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்தைஅண்டியதீவுகளிலிருந்து, இராமேஸ்வரம் ஆலயத்துக்குபால் விநியோகம் நடைபெற்றிருக்கின்றது.

யாழ் குடாநாட்டிலிருந்துசிறியபடகுகளில் போய் "நைட் ஷோ" பார்த்துவந்தவர்களுடையகதைகளும் உண்டு.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் யாழ்நூல் தந்த சுவாமி விபுலானந்தர் பேராசிரியராக மிளிர்ந்தார். யாழ் இராமநாதன் கல்லூரியில் மகாராஜபுரம் சந்தானம் அதிபராகவரலாறுபடைத்தார்.




யாழ்ப்பாணப் பாடசாலைகளில் இந்திய ஆசிரியர்கள் சேவையாற்றினர். இந்தியாவிலே பெயர் சொல்லத்தக்க பதவிகளை யாழ்ப்பாணத்தவர் வகித்தனர்.திருவனந்தபுரத்தில் நீதிபதியாகச் செல்லப்பாபிள்ளை, சென்னை எழும்பூர் முனிசிபல் தேர்தலிலே மங்களம்மாள், மதுரையில் மருத்துவராக சுந்தரம்பிள்ளை எனப் பட்டியல் நீளமானதாகும்.

இடுக்கண் களைவதாம் நட்பு என துன்பம் நேர்கையிலெல்லாம் இந்தியா துணையாகியிருக்கின்றது.

காலனித்துவக் காலத்தில் நல்லைநகர் ஆறுமுகநாவலர், தமிழையும் சைவத்தையும் பேணிப்பாதுகாக்க, தமிழகம் சென்றார்.

1948 க்குப் பின்னர் பிரஜாவுரிமை விவகாரம்,1983 இனக்கலவரம், 2022 பொருளாதாரச் சரிவு ,2025 டித்வா புயல் என இந்தியா தோள்கொடுத்த வரலாறு நீண்டதாகும்.

1980களில் இந்தியாவின் அரவணைப்புடனேயே ஆயுதப் போராட்டம் வலுப்பெற்றது.

அன்றைய காலத்தில், தமிழ்நாட்டிலிருந்து கிடைத்த அனுசரணை எழுத்தில் வரையறுத்துவிடக் கூடியதல்ல. கரையோரப் பகுதிகளில் மீனவ சமூகத்தினர் உதவினர். விவசாயிகள், நிலச்சுவான்தார்கள், வர்த்தகர்கள் போன்றோரிடமிருந்து இடவசதி, பொருளுதவி என்பன கிடைத்தன. அதிகாரிகளிடமிருந்து,விதிமுறைகளைத் தாண்டிய, அனுசரணைகிடைத்தது. கல்விக்கானவாயில்கள் அகலத்திறந்தன. இவ்வாறாக,தமிழ்நாட்டில் கிடைத்தகரிசனையானஅரவணைப்புக்குஎல்லையே இருக்கவில்லை.

இலங்கைத் தமிழர் அவலத்தை முன்னிறுத்தி இருபது வரையானோர் தமிழ்நாட்டில் தீக்குளித்துள்ளனர். அஃது, குறைத்து மதிப்பிடக்கூடாத தியாகமாகும்.

முதன் முதலிலே, முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் தஞ்சாவூரிலேயே அமைந்தது.

முதன் முதலிலே, இன அழிப்புக்கு எதிரான தீர்மானம் தமிழக சட்டசபையிலேயே நிறைவேற்றப்பட்டது.

மறுவளத்தில், இறுதியுத்தத்தின் போது தமிழக ஆட்சியாளரின் மெத்தனம், இந்தியா தர்மசத்திரம் அல்ல என்னும் நீதிமன்றத்தின் உச்சாடனம், இந்திய அமைதிப்படை, மீனவர் பிரச்சினை போன்றவை இலங்கை தமிழரிடையே எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவன என்பது மறுப்பதற்கில்லை.

இந்தியாவின் ஈடுபாடுதொடர்பில், "சோழியன் குடுமிசும்மா ஆடாது" என்னும் நக்கல் நையாண்டி இலங்கைதமிழரிடையே உண்டு.

தன்னுடைய நலன்களைப் பேணிக்கொள்வதே இந்தியாவின் நோக்கம் என்னும் குற்றச்சாட்டு உயிர்ப்புடன் பேணப்படுகின்றது.

இலவசங்கள் என்பது யதார்த்தம் அல்ல. ஏதோவொரு நோக்கத்துடனேயே, ஒவ்வொரு செயலும் முன்னெடுக்கப்படுவதாகும். "தனக்கு மிஞ்சியதே தனம்" என்பதே பேச்சு வழக்குச் சொல்லாடலாகும்.

அந்தவகையிலே, தன்னுடைய நலன்களைத் துறந்துவிட்டே இந்தியா உதவ வேண்டும் என்னும், இலங்கைத் தமிழரின், எதிர்பார்ப்பே கேள்விக்கு உட்படுத்தப்பட வேண்டியதாகும்.

இந்தியா, சர்வதே சரீதியாகக் கவனிப்பைப் பெறுகின்ற, ஒன்றரை பில்லியன் சனத்தொகையைக் கொண்ட தேசமாகும்.

இந்தியாவின் 72 மில்லியன் தமிழரும், முப்பதுமைல் உப்புக்கரிக்கும் கடலால் பிரிக்கப்பட்ட, மூன்றுமில்லியன் இலங்கைத் தமிழரும், காலதேசவர்த்தமானத்தைக் கடந்ததொடர்பைக் கொண்டவர்களாகும்.

அஃது, அண்மைகாலமாகவே தொய்வடைகின்றது.

ஒருகாலத்தில், இந்தியப் பிரதமர் முதல் தமிழக முதலமைச்சர் வரை நேரடியான தொடர்பை, இலங்கை தமிழ் தலைவர்கள் பேணினார்கள். அதுவெல்லாம் பழங்கதையாகிவிட்டது.

தமிழகமுதலமைச்சருடன் பத்தோடுபதினொன்றாகநின்று "செல்பி" எடுப்போரும், தமிழக அரசியல்வாதிகளைத் தொடர்புகொள்ள "ஏஜன்டை" தேடுவோருமே இலங்கைத் தமிழரின் "தலைவர்களாக" தம்பட்டமடித்துக் கொள்கின்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இந்த நிலைமாற வேண்டும்.

தமிழகத்துடன் ஆத்மார்த்தமான தொடர்பாடலை, இலங்கைத் தமிழ் தரப்பு,வளர்த்துக் கொள்ளவேண்டியதுகாலத்தின் கட்டாயமாகும்.

இல்லாவிடில், தமிழக- இலங்கைத் தமிழ் உறவுகானல் நீராகிவிடுவது தவிர்க்க முடியாததாகும். ●

# கீறீன்லாந்துசர்ச்சையில் வரிவிதிப்பைட்ரம்ப் ஆயுதமாகப் பயன்படுத்துவதுநேட்டோவுக்குகுழிபறிக்கும்!

பல ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் "ஒவ்வொரு பொருளுக்கும் சகல பொருட்களுக்கும்" பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் 10 சதவீதமான வரியை விதிக்கப்போவதாகவும் கிறீன்லாந்து தொடர்பாக இணக்கப்பாடுஏற்படும் வரைஅந்தவரியை ஜூன் முதலாம் திகதிதொடக்கம் 25 சதவீதமாக அதிகரிக்கப் போவதாகவும் ட்ரம்ப் நிருவாகம் அறிவித்திருக்கிறது. டென்மார்க்கின் நிருவாகத்தில் உள்ள ஆர்க்டிக் பிராந்திய தீவான கிறீன்லாந்தை பணம் கொடுத்து வாங்குவதற்கு அல்லது வேறுவிதமாககுறிப்பாக, இராணுவ பலத்தை பயன்படுத்தி யேனும் அமெரிக்காவுடன் இணைத்துக் கொள்வதற்கு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கங்கணம் கட்டி நிற்கிறார்.


ஏற்கெனவேஅந்தஐரோப்பியநாடுகள் ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு அமெரிக்கா விதித்த 15 சதவீத வரி நடைமுறையில் இருக்கிறது. பெப்ரவரி முதல் விதிக்கப் போவதாக வெள்ளைமாளிகை அறிவித்திருக்கும் புதிய வரி அந்த நாடுகளுக்கு மேலதிக சுமையாக இருக்கப் போகிறது.

டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, நோர்வே, சுவீடன் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவையே வரிவிதிப்புக்கு அமெரிக்கா இலக்கு வைத்திருக்கும் ஐரோப்பிய நாடுகளாகும்.

அமெரிக்காவின் நடவடிக்கை "ஏற்றுக் கொள்ள முடியாதது" என்று பிரெஞ்சு ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் கூறியிருக்கும் அதேவேளை, ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் கீய்ர் ஸ்ராமர் அதை "முற்றுமுழுதாகத் தவறானது" என்று குறிப்பிட்டிருக்கிறார். அமெரிக்கா இலக்கு வைத்திருக்கும் இந்த நாடுகள் சிறிய எண்ணிக்கையானதுருப்புக்களை கிறீன்லாந்துக்கு அனுப்பி வைத்திருக்கின்றன.

சுயாட்சி பிராந்தியமான கிறீன்லாந்தை பாதுகாப்பதில் ஐரோப்பாவிற்கு உள்ள கூட்டுகடப்பாட்டை வெளிக்காட்டும் ஒரு நடவடிக்கையாக கண்காணிப்பு பணிகளுக்காகவே துருப்புக்களை அனுப்பியிருப்பதாக அந்தநாடுகள் கூறுகின்றன.

அண்மையில் தென்னமெரிக்க நாடான வெனிசூலாவுக்குள் பிரவேசித்த அமெரிக்கத் துருப்புகள் அந்தநாட்டின் ஜனாதிபதி நிக்கலஸ் மதுரோவையும் அவரது மனைவியையும் அமெரிக்காவுக்கு கடத்திச் சென்றன. அதற்கு பிறகு - வேறுபட்டநோக்கங்களுக்காகவும் வேறுபட்ட சூழ்நிலைகளிலும் - கொலம்பியா, கியூபா, மெக்சிக்கோமற்றும் ஈரான் ஆகிய நாடுகளில் அடுத்து தலையீடு செய்வதுகுறித்துபரிசீலிக்கவேண்டிவரலாம் என்று ட்ரம்ப் எச்சரிக்கை செய்திருந்தார். இத்தகைய பின்புலத்திலேயே ஐரோப்பிய ஒன்றியத்தை சேர்ந்த நாடுகள் கிறீன்லாந்துக்கு படைகளின் தேவையைஉணர்ந்தன.



இராணுவ நடவடிக்கைகள் மூலமாக அல்லது வரிவிதிப்புக்களை ஆயுதமாகப் பயன்படுத்துவதன் மூலமாக நாடுகளை அச்சுறுத்தி பிராந்தியங்களைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கான ட்ரம்ப் நிருவாகத்தின் திட்டங்களில் உட்கிடையாக இருக்கும் நவ ஏகாதிபத்திய உணர்வுக்கு அப்பால், அமெரிக்காவின் நடவடிக்கைகள் சர்வதேச சட்டத்தை அப்பட்டமாக மீறுவதாக அமைந்திருக்கின்றன.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் அமெரிக்கா கடைப்பிடிக்கும் இந்த அணுகுமுறை அத்திலாந்திக் சமுத்திரத்தின் இருபுறமும் உள்ளநாடுகளுக்கு இடையிலான வர்த்தக உடன்படிக்கைகளில் பலவருடங்களாக ஏற்பட்டு வந்த முன்னேற்றத்தை பின்னடைவுக்கு உள்ளாக்கும் ஆபத்தைக் கொண்டுள்ளன.

முதலாவதாக,டென்மார்க் மற்றும் ஐரோப்பிய நாடுகளை குறிவைத்து ட்ரம்ப் நிருவாகம் எடுக்கவிருக்கும் ஒரு தலைப்பட்சமான நடவடிக்கைகளுக்கு அமெரிக்க காங்கிரஸின் ஆதரவோ அல்லது எந்தவொரு சட்டரீதியான அடிப்படையோ கிடையாது.

இரண்டாவதாக, பரவலாக நாடுகள் மீது வரிகளை விதிப்பதற்கு சர்வதேச அவசரகால பொருளாதார அதிகாரங்கள் சட்டத்தை பயன்படுத்தியதற்கு எதிராக நீதிமன்றத்தின் தீர்ப்பொன்றை ட்ரம்ப் நிருவாகம் எதிர்நோக்கியிருக்கிறது.

மூன்றாவதாக, அமெரிக்காவின் முக்கியமான தொழில்நுட்ப நிறுவனங்களும் அவற்றுடன் தொடர்புடைய சேவை வழங்குனர்களும் ஐரோப்பிய ஒன்றியத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஒழுங்கமைப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு 'வரிவிதிப்புக்கு எதிரான ஏற்பாடு' ஒன்று இருக்கிறது. இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படாத அந்த ஏற்பாட்டை ஐரோப்பிய ஒன்றியம் தற்போது பயன்படுத்தக் கூடியசாத்தியம் இருக்கிறது.

ட்ரம்பினால் உருவாக்கப்பட்ட இந்த நெருக்கடியின் முடிவு எவ்வாறானதாக இருந்தாலும், அத்திலாந்திக் சமுத்திரத்தின் இருபுறங்களிலும் இருக்கும் நாடுகளுக்கு இடையில் ஏற்பட்டிருக்கும் பிளவை சீர்செய்வதற்கு வருடங்கள் அல்ல, தசாப்தங்கள் செல்லலாம்.

அதேவேளை, வட அத்திலாந்திக் ஒப்பந்தநாடுகள் இராணுவக் கூட்டணி(நேட்டோ) பலவீனமடைந்தால் ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு மத்தியில் உக்ரெயின் நாட்டுக்கு உறுதியான முறையில் உதவமுடியாமல் போகும். அது மாத்திரமல்ல, கிழக்கு முனையில் எதிர்காலத்தில் ரஷ்யா மேற்கொள்ளக்கூடிய ஆக்கிரமிப்புக்களை தடுப்பதும் கஷ்டமாகப் போயாவிடும் ஆபத்து இருக்கிறது.

வாஷிங்டன் தற்போது கடைப்பிடிக்கும் போக்கிற்கு முற்றிலும் வேறுபட்டதான அறிவார்ந்ததலைமைத்துவமே இன்றுஅவசியமாகிறது.

(தி இந்துஆசிரியதலையங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைக் கள்ளர்கள்



நிலாந்தன்

நண்பரானஅரச ஊழியர் ஒருவர் சற்று அளவால் பெருத்த மேற்சட்டையோடு காணப்பட்டார். "எங்கே தைத்தாய்?" என்று கேட்டேன். "வழமையாகத் தைக்கும் இடத்தில்தான்.ஆனால் இதை அந்த டெய்லர் தைக்கவில்லை. அவருடைய உதவியாளர் தைத்திருக்கலாம் என்று நினைக்கிறேன்.கொண்டு போய் காட்டினேன். அதைத் திருத்தித் தருவதாகச் சொன்னார்." என்றுநண்பர் சொன்னார்."அங்கே உதவியாளர்கள் நிரந்தரமாக இல்லையே? அவர்களை வைத்து எப்படித் தைப்பது? அவர்களிடம் தொழில் தேர்ச்சியும் இருக்காதே? இடையிடை வந்து போறவர்களிடம் இவர் எப்படிசேட்டைத் தைக்கக் கொடுத்தார்?" என்றுகேட்டேன்.

டெய்லருக்கு மட்டுமில்லை, மெக்கானிக், வயரிங் வேலைசெய்பவர், மேசன், தச்சுவேலை செய்பவர்கள் என்று...அநேகமான தொழில்களுக்கு உதவிக்கு அன்றாடச் சம்பளத்துக்கு ஆளைப் பிடிக்க முடியாமல் இருக்கிறது.




அப்படிப் பிடிப்பதென்றால் ஒன்றில் அவர் அங்கே நிரந்தரமாக அல்லது மாதச் சம்பளத்துக்கு வேலைகிடைக்கும் என்று நம்பவேண்டும். அல்லது முன்கூட்டியே சிலவாரங்களுக்கு முன்பு அவரைப் பதிவு செய்யவேண்டும். இவை முதன்மை நிபந்தனைகள். இவை தவிர வேலைக்கு வரும்போது கைபேசியோடு வருவார்கள். அடிக்கடி கைபேசி கிணுகிணுக்கும். அவரை மேற்பார்வை செய்ய ஒருவர் இல்லையென்றால் அவர் கைபேசியோடு காலத்தைக் கடத்துவார்.இடையில் தேநீர் இடைவெளி, உணவு இடைவெளி போன்றவற்றையும் எடுத்துக் கொள்வார்.அவர் வேலைநேரத்தில் கைபேசியைப் பயன்படுத்தவில்லை என்பதனைக் கண்காணிப்பதற்குஒருமேற்பார்வையாளர் தேவை.வீட்டில் வயோதிபர்கள் இருந்தால் பிரச்சனை இல்லை. அப்படியாரும் இல்லையென்றால் என்ன செய்வது?

கூலிக்கு ஆளைப்பிடிப்பதும் கஷ்டம். பிடிக்கும் ஆளை மேற்பார்வை செய்யவும் ஒருவர் வேண்டும். கைபேசிகளின் காலத்தில் கூலிக்கு ஆளைப் பிடிப்பது எவ்வளவு கஷ்டமானது?

"நாட் சம்பளத்துக்கு வருவார்கள். இரண்டு நட்டுக் கழட்டியவுடன் தாங்களும் இனி மெக்கானிக்காக வேலை செய்யலாம் என்று நம்பிதனியாக கடை திறந்து விடுகிறார்கள்" என்று ஒரு மூத்தமெக்கானிக் சொன்னார். இது மெக்கானிக், வயரிங், பிளம்பிங் டெய்லரிங்..போன்ற பல துறைகளிலும் காணப்படும் ஒரு பிரச்சினை. வேலைபழக வேண்டும், அதற்காக தொடர்ச்சியாக ஓரிடத்தில் வேலை செய்யவேண்டும் என்று சிந்திப்பவர்கள் குறைந்து வருகிறார்கள். இதனால் தொழில் தேர்ச்சியும் நிபுணத்துவமும் குறைந்து வருகிறது. கைபேசியில் பொழுதுபோக்கு கிறார்கள்"என்றும் அவர் சொன்னார். பொழுதுபோக்கிகளிடம் ஒரு தொழிலை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற தியானமும் உழைப்பும் இல்லை.

ஆசிரியர் ஒருவர் சொன்னார்,வீட்டில் மரவேலைகள் இருப்பதனால் தனக்குத் தெரிந்த ஒருவரை வேலைக்கு அழைத்திருக்கிறார். இதோ வருகிறேன், இதோ வருகிறேன் என்று சொல்லி அவர் மூன்று மாதங்களாகக் கடத்தி விட்டாராம். முடிவில் அவரை தனக்கு அறிமுகப்படுத்திய நண்பரிடம் கேட்டிருக்கிறார்.நண்பர் சொன்னாராம்,அவர் வரமாட்டார். ஏனென்றால் அவருக்கு உறவினர்கள் வெளிநாட்டிலிருந்து அனுப்பும் காசு வருகிறது. அவருடையது சிறிய குடும்பம்.எனவே அந்தக் காசுபோதும். உழைக்கவேண்டும் என்ற நிர்பந்தம் இல்லை. வெளிநாட்டுக் காசு போதாது என்றால் அவர் வேலைக்கு வருவார்" என்று.

> தேவை, தெரிவு, என்பவற்றின் அடிப்படையில் தொழில் நாடுவோரையும் தொழில் கொடுப்பவரையும் இணைக்கும் விதத்தில் இலத்திரனியல் தீர்வு ஒன்றுக்கு போகலாம் தானே?

கைபேசிகள் ஒருபுறம் மனிதர்களை முன்னப்பொழுதையும் விட அதிகரித்த அளவில் பொழுதுபோக்கிகள் ஆகிவிட்டன. உள்ளங்கையில் பொழுது போக்கும் கருவி. இன்னொருபுறம் ஈழத் தமிழர்கள் மத்தியில் புலம்பெயர்ந்த உறவினர்கள் அனுப்பும் காசு ஒரு தொகுதியினரை சோம்பேறிகள் ஆக்கிவிட்டதா?

புலம்பெயர்ந்த தமிழர்கள் தாங்கள் வாழும் நாடுகளில் "கழிப்பறைகளைக் கழுவுகிறார்கள்.பேரங்காடிகளில் வேலை செய்கிறார்கள் பனி அள்ளிப் போடுகிறார்கள்.." என்று சொல்லிஅவர்கள் செய்யும் வேலைகளை இழிவுபடுத்தும் பதிவுகளை சமூகவலைத் தளங்களில் காணமுடியும். தொழில் தொடர்பான தமிழ் சமூகத்தின் மதிப்பீடுகளை அது காட்டுகிறது.ஆனால் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் அவ்வாறான தொழில்களுக்கு கிடைக்கும் சம்பளம் மிகப்பெரியது.

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் மட்டுமல்ல, தாயகத்திலும் மேற்சொன்ன வேலைகளுக்கு இப்பொழுது அதிகசம்பளம் கேட்கப்படுகிறது. உதாரணமாக, ஒரு கழிப்பறை அடைத்துவிட்டது என்றால் அதை துப்புரவாக்குவதற்கு 3000 அல்லது 5000 ரூபாய்க்குக் குறையாத சம்பளம் கொடுக்கவேண்டும்.ஒரு கூலித் தொழிலாளிக்கு 2500-3500ரூபாய் வரையிலும் கேட்கப்படுகிறது. அதுவும் முன்கூட்டியே பதிவுசெய்ய வேண்டும்.சாதாரணமாகவீட்டைக் கூட்டுவது,வளவைத் துப்புரவாக்குவதுபோன்றவேலைகளைஒவ்வொருநாளும் காலையில் வந்து ஆகக்கூடியது ஒரு மணித்தியாளம் செய்வதற்கு ஆகக்குறைந்தது 300 ரூபாய் கொடுக்க வேண்டும். தேங்காய் பிடுங்குவதற்கு ஒரு மரத்துக்கு 400 ரூபாய் கொடுக்கவேண்டும்.

மேசன் வேலை, தச்சுவேலை போன்றவற்றுக்கு துணைக்குவரும் உதவியாளருக்கு 3000க்கு குறையாமல் கொடுக்க வேண்டும். ஒரு டெய்லருக்கு உதவிக்கு நிற்பவருக்கு 3000 ரூபாய் கொடுக்கவேண்டும்.



இவையாவும் நாட் சம்பளங்கள்.மாதச் சம்பளங்களை இப்பொழுது பார்ப்போம். முதியோரைப் பராமரிப்பதற்கு, உடல் வழங்காதவர்களைப் பராமரிப்பதற்கு, யாழ்ப்பாணத்தில் உள்ள நிறுவனங்கள் ஆகக்குறைந்தது 2500 ரூபாயும் ஆகக்கூடியது 5000 ரூபாயும் ஒருநாளைக்குக் கேட்கின்றன. இதுவே மாதச் சம்பளம் என்று பார்த்தால்,ஆகக்குறைந்தது 60,000. ஆகக்கூடியது அவரவர் வல்லமைக்குத் தகுந்தபடி.

பிள்ளை பெற்ற பெண்ணை பராமரிப்பதற்கு 60,000த்துக்கும் அதிகமாகக் கொடுக்கவேண்டும். அதிலும் வேலைப் பிரிவுகள் உண்டு. குழந்தையைக் குளிப்பாட்டுவது, தாயைக் குளிப்பாட்டுவது போன்றவற்றுக்கு அடிப்படைச் சம்பளம். அதற்குமப்பால் உடுப்புகளைத் தோய்ப்பது, தாய்க்குச் சமைப்பது போன்ற வேலைகளையும் சேர்த்தால் 60,000 - 80000 வரை கொடுக்க வேண்டும். 31 வதுநாள் சடங்கு முடியும் போது பராமரிப்பாளருக்கு புதிய சேலை வாங்கிக் கொடுக்கவேண்டும். பிள்ளை பெற்ற பெண்ணுக்குக் கொடுக்க வேண்டிய உணவுக்குத் தேவையான சரக்குச் சாமான்களை ஏற்கனவே பவுடர் ஆக்கிக் கொடுக்கவேண்டும்.வேலைக்கு வருபவர் அவற்றையெல்லாம் அரைக்கமாட்டார்.

சமையலுக்கு வருபவர்கள் மூன்றுவேளையும் சமைப்பது என்றால் குறைந்தது 60,000 கொடுக்கவேண்டும். மூன்று வேளை சாப்பாடு கொடுக்கவேண்டும். இரண்டு வேளை சமைப்பது என்றால் குறைந்தது 40,000 கொடுக்கவேண்டும். சாப்பாடும் கொடுக்கவேண்டும். மதிய உணவை சமைத்து விட்டு அவர் கிளம்பி விடுவார். சமையலுக்கு வருபவர்கள் சில சமயம் வீட்டை, வீட்டு வளவைத் துப்பரவாக்கமாட்டார்கள். அதற்குத் தனிச் சம்பளம்.

முன்பெல்லாம் தச்சு வேலை,மேசன் வேலை என்று வந்தால் வேலை முடிந்ததும் வேலைத் தளத்தைத் துப்புரவாக வேண்டியது அவர்களுடைய பொறுப்பு. ஆனால் இப்பொழுது பெரும்பாலானவர்கள் வேலைமுடிந்த பின் வேலைத் தளத்தை அப்படியே விட்டுவிட்டுப் போய்விடுவார்கள். அந்த இடத்தைத் துப்புரவாக்க, தனியாக கூலிக்குஆளைப் பிடிக்க வேண்டும்.

அதாவது வேலைச் சுத்தம் இல்லை. அதைச் சுட்டிக்காட்டினால் அடுத்தமுறை வேலைக்கு வரமாட்டார்கள்.


அவ்வளவு டிமாண்ட். ஒருபுறம் சாதாரண சிறியவேலைகளுக்கு ஆட்கள் இல்லை. இன்னொரு புறம் ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் அரசவேலை கேட்டு தொடர்ச்சியாக போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கூலிவேலைக்கு வரவேண்டும் என்று இக்கட்டுரை கேட்கவில்லை.ஓர் ஆர்ப்பாட்டத்தின் போது அவர்களில் சிலர் கூலிவேலையை இகழும் விதத்தில் விளக்குமாறு, தும்புத்தடி, பொதிசுமக்கும் தள்ளுவண்டி போன்றவற்றோடு போராடினார்கள் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

மூத்த ஆசிரியை ஒருவர் சொன்னார் "எங்களுக்கு கிடைக்கும் நாட் சம்பளத்தை விடஅதிகமாக இன்சூரன்ஸ் கொம்பனி முகாமையாளர்கள் பெறுகிறார்கள்.அதை விட அதிகமாக சமையல் வேலைசெய்பவர்கள், குழந்தைகளை, முதியோரைப் பராமரிப்பவர்கள், குறிப்பாக பிரசவம் பார்ப்பவர்கள் பெறுகிறார்கள்.எங்களுடைய பட்டத்துக்கும் தொழில் தேர்ச்சிக்கும் பெறுமதி இல்லை" என்று.

இதில் தேவை, தெரிவு, என்பவற்றின் அடிப்படையில் தொழில் நாடுவோரையும் தொழில் கொடுப்பவரையும் இணைக்கும் விதத்தில் இலத்திரனியல் தீர்வு ஒன்றுக்கு போகலாம் தானே? முச்சக்கரவண்டி ஓட்டுநர்களையும் சேவை நாடுனர்களையும் இணைக்கும் செயலிகளைப் போல இந்த விடயத்திலும் ஒருசெயலியைப் பரிசோதித்தால் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர் உரிமைகள் காக்க...



பழ. நெடுமாறன்

இலங்கையில் புதிய அரசமைப்புச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படும் நிலையில், அதனால் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்கவும், அவர்களது உரிமைகளைக் காக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். முதல்வரின் இந்தக் கடிதம் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் மனக் கவலையை வெளிப்படுத்துவதாகும்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, “இலங்கைத் தமிழர்கள் 77ஆண்டுகளுக்கும் மேலாகத் திட்டமிட்ட இனப் பாகுபாடு, வன்முறை மற்றும் உரிமைகளுக்கான கட்டுப்பாடுகளைச் சகித்து வந்துள்ளனர்.இதையொரு சமுதாயத்துக் குஎதிரான இனப்படுகொலை என வரையறுக்கும் நிலைஉருவாகியுள்ளது.

சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கையின் அரசமைப்புகள் 1947, 1972 மற்றும் 1978-ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட அரசமைப்புகள் அனைத்தும் ஒற்றை ஆட்சிஅரசுக் கட்டமைப்பில் வேரூன்றி இருந்தன. இது திட்டமிடப்பட்ட இன வன்முறை, கட்டமைப்பு ரீதியான ஒடுக்கு முறைமற்றும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுப்பதற்கு வழிவகுத்தது”.

இலங்கையில் வாழும் தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப்பட்டு ஒடுக்கப்படுகிறார்கள் என்பதைக் கடந்தகால வரலாறு எடுத்துக்காட்டுகிறது. 1948-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலை பெற்றவுடன், முதலாவதாக இந்திய வம்சாவளித் தமிழர்கள் என அழைக்கப்படும் மலையகத் தமிழர்களில் 10 லட்சம் பேரின் குடியுரிமைகள் பறிக்கப்பட்டு, அவர்கள் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டனர்.

இலங்கையின் நாடாளுமன்றத்தில் சிங்களர்களின் 63 தொகுதிகள் 77-ஆக அதிகரிக்கப்பட்டன.தமிழர்களின் தொகுதிகள் 20-இலிருந்து 11-ஆகக் குறைக்கப்பட்டன. 1956-ஆம் ஆண்டு இலங்கையின் ஆட்சிமொழியாக சிங்களம் மட்டுமே என்னும் சட்டம் உருவாக்கப்பட்டது.

சிங்களஅரசுப் பதவிகளில் தமிழர்கள் படிப்படியாக ஓரங்கட்டப்பட்டனர்.

சிங்கள ராணுவத்திலும் தமிழர்களின் சேர்ப்பு மறுக்கப்பட்டது. தபால், ரயில்வே, சுங்கம் மற்றும் மருத்துவமனைகளிலும் தமிழர்களின் எண்ணிக்கை மிகவும் குறைக்கப்பட்டது. பல்கலைக்கழகப் படிப்புகளில் தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டனர். இதற்கு எதிராக தந்தை செல்வநாயகம் தலைமையில் சுமார் 30 ஆண்டுகள் தமிழர்கள் அறப்போராட்டங்களில் ஈடுபட்டனர். வேறுவழியே இல்லாமல் தான் 1976-ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டையில் தமிழர் விடுதலைக் கூட்டணி கூடி சுதந்திரத் தமிழீழம் கோரிக்கையை முன்வைத்தது.

1979-ஆம் ஆண்டுதமிழர்களின் அறப்போராட்டங்களை ஒடுக்குவதற்காகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்றபெயரில் கொடியசட்டத்தைச் சிங்கள ஆட்சியினர் கொண்டுவந்தனர்.தென்கிழக்காசியாவிலேயே இரண்டாவது பெரிய நூலகமும், 95,000 புத்தகங்களைக் கொண்ட யாழ்ப்பாண நூலகம் சிங்கள ராணுவத்தினரால் திட்டமிட்டு எரித்துச் சாம்பலாக்கப்பட்டது. கலாசாரரீதியாகத் தமிழர்களுக்குஎதிரான இனப் படுகொலை இது.

1956, 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் தமிழர்களுக்கு எதிரான இனப் படுகொலைகளும், அவர்களின் சொத்துகள் சூறையாடுதலும் நிகழ்த்தப்பட்டன. 1983-ஆம் ஆண்டுநடைபெற்ற இனப் படுகொலையின் போது 3,000-க்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1983-ஆம் ஆண்டு இந்தியச் சுதந்திர நாளன்று (ஆகஸ்டு 15) இந்திய பிரதமர் இந்திராகாந்தி தில்லி செங்கோட்டையில் கொடி ஏற்றி வைத்துப் பேசிய போது, “இலங்கையில் நடைபெறுவது இனப் படுகொலை ஆகும்.இதை இந்தியாபார்த்துக் கொண்டு சும்மா இருக்காது” என எச்சரித்தார். இந்தியாவின் பிரதமரால் இனப் படுகொலை என்ற வார்த்தை முதல் முதலாகப் பயன்படுத்தப்பட்டது.

இந்திய பிரதமர் இந்திராகாந்தி இலங்கை இனப் பிரச்னை குறித்து சமரச நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது, ஜெயவர்த்தனமனம் கொதித்துப்போய், “இந்திய அரசு எங்கள் மீதுபடையெடுக்க விரும்புமானால், 24 மணிநேரத்தில் இலங்கையைக் கைப்பற்றி என்னையும் கைது செய்யமுடியும். ஆனால், அதற்குள்ளாகவே இலங்கையில் வாழும் தமிழர்கள் சிங்கள மக்களால் அடியோடு தீர்த்துக் கட்டப்படுவார்கள்” என எச்சரித்தார்.

இந்திராகாந்திகாலத்தில் அவரின் சிறப்புத் தூதரான ஜி. பார்த்தசாரதியின் முன்னிலையில் சிங்களஅரசு-தமிழ்த் தலைவர்கள் இடையே செய்யப்பட்ட உடன்பாட்டையும், ராஜீவ்-ஜெயவர்த்தன ஆகியோர் செய்துகொண்ட உடன்பாட்டையும் முழுமையாக நிறைவேற்ற சிங்களஅரசு முன்வராததோடு, தமிழர்களுக்கெதிரான ஒடுக்கு முறைகளைத் தொடர்ந்தது. இந்தியா குறித்தோ, உலக நாடுகள் குறித்தோ சிங்கள அரசு சிறிதளவு கூடக் கவலைப்படவில்லை.

இனப் படுகொலை என்னும் பெரும் குற்றத்தைத் தடுப்பது மற்றும் அவர்களுக்குத் தண்டனை விதிப்பது ஆகியவை குறித்து ஆராய்வதற்காக 1948-ஆம் ஆண்டு ஐ.நா. பேரவை கூட்டிய மாநாட்டில் 140 நாடுகள் பங்கேற்றன. இனப் படுகொலைஎன்பதுஒருநாட்டின் அரசால் திட்டமிட்டுக் கடைப்பிடிக்கப்படுவதாகும்.இனரீதியாகவோ,மதரீதியாகவோஒருகுழுவினரைஅடியோடுஒழித்துக்கட்ட மேற்கொள்ளப்படும் நடவடிக்கையே இனப் படுகொலையாகும் என அந்த மாநாடுபதிவுசெய்தது.

இனப் படுகொலையைத் தடுக்கவேண்டுமானால், இதில் ஈடுபடும் ராணுவம் அல்லது சிறப்புப் படைபோன்றவை தடை செய்யப்படவேண்டும். இவற்றைச் சேர்ந்தவர்களுக்கு வெளிநாட்டு விசாக்கள் வழங்கப்படக் கூடாது. இனப் படுகொலையில் ஈடுபடும் அரசுகள் அல்லது நாடுகளின் மக்கள் ஆகியோர் மீது ஆயுதத் தடையை ஐ.நா. விதிக்கவேண்டும்.மேலும், ஐ.நா. விசாரணை ஆணையங்களை ஏற்படுத்தவேண்டும் என இந்த மாநாடு இனப் படுகொலை குறித்து திட்டவட்டமானகோட்பாடுகளையும், இனப் படுகொலையில் ஈடுபடும் நாடுகளின் மீது எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விதிகளை வகுத்தது.

ஜெர்மனியில் ஹிட்லர் தலைமையில் நாஜி கட்சிஆட்சியின் போது, 60 லட்சம் யூதர்கள் சித்திரவதை,படுகொலை, உயிரோடு எரித்தல் போன்ற கொடுமைகளுக்கு உள்ளானார்கள். இவர்களுக்கென்று தனியான தடுப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு, அதில் அவர்கள் அடைக்கப்பட்டனர்.

2-ஆம் உலகப் போருக்குப் பின்னர் இனப் படுகொலையாளர்களை விசாரித்துத் தண்டனை வழங்க நீதிமன்றங்களை அமைத்தது. நாஜி தலைவர்கள் பலர் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

அவ்வாறே ருவாண்டா, போஸ்னியா, சூடான் ஆகியநாடுகளில் நடைபெற்ற இனப் படுகொலைகளைச் சர்வதேச நீதிமன்றம் விசாரணை செய்து தண்டித்தது. ஆனால், சிங்கள அரசுமீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க உலகஅமைப்புகள் எதுவும் முன்வரவில்லை.

2009-ஆம் ஆண்டுநடைபெற்ற இறுதிப்போரில் ஐ.நா. பேரவையால் தடை செய்யப்பட்டகொத்துக் குண்டுகள், நச்சுவாயுகுண்டுகள், ரசாயனகுண்டுகள் மற்றும் கொடூரமான ஆயுதங்களை சிங்கள ராணுவம் தமிழர்களுக்குஎதிராகப் பயன்படுத்தியது. மேலும், மருத்துவமனைகள் மற்றும் சிங்கள அரசால் அறிவிக்கப்பட்டபோரற்ற அமைதி மண்டலங்கள் ஆகியவற்றிலிருந்தவர்கள் மீதும் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

2009-ஆம் ஆண்டில் ஐ.நா. செயலாளர் நாயகமாக இருந்தபான் கீ மூன், அமெரிக்கவெளியுறவுச் செயலாளராக இருந்த ஹிலாரிகிளின்டன், சர்வதேச சட்ட பேராசிரியர் பிரான்சிஸ் பாயில், ஐ.நா. மனிதஉரிமை ஆணையர் லூயி ஆர்பர், தென்னாப்பிரிக்கத் தலைவரும், கிறிஸ்தவ ஆயருமான டெஸ்மாண்டு டூட்டு, ஐ.நா. செயலாளராக (1997-2006) இருந்த கோபி அன்னான், அயர்லாந்து அதிபரும், ஐ.நா. மனிதஉரிமை ஆணையராக இருந்தமேரிராபின்சன், ஐ.நா. மனித உரிமை ஆணையராக இருந்த நவநீதம் பிள்ளை போன்றோர் துணிந்து வெளிப்படையாகவே ஈழத் தமிழர்களுக்கு எதிரான சிங்கள இனவெறிப் படுகொலைகளைக் கண்டித்தனர்.

ஆனால், ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் மேற்குநாடுகள் சிங்களஅரசின் இனப் படுகொலையைக் கண்டித்து அது குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும் எனக் கூட்டாக கொண்டுவந்த தீர்மானத்தைசீனாமிகக் கடுமையாக எதிர்த்தது. அதன் விளைவாக, அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. இந்திய அரசோ இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலைகள் குறித்து சிங்கள அரசே ஒரு விசாரணைக் குழுவை அமைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

கடந்த ஜனவரி 17-ஆம் தேதியன்று ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் அலுவலகஅறிக்கையில் “சிங்களப் பாதுகாப்புப் படையினர் உள்ளிட்டோர் பாலியல் வன்முறையில் ஈடுபட்டதை பகிரங்கமாகப் பொதுவெளியில் ஒப்புக்கொள்வதற்கான நடவடிக்கையைச் சிங்கள அரசுமேற்கொண்டு அதற்கு முறையான மன்னிப்புக் கேட்கவேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்டு சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும். அவர்களுக்கு உதவிகிடைப்பதை உறுதி செய்யவேண்டும்” என அறிவித்துள்ளது.

முதல்வர் ஸ்டாலினின் கருத்துகளையும், ஐ.நா. மனிதஉரிமை ஆணையம் மற்றும் ஐ.நா. பேரவையின் பொதுச் செயலாளர்கள் உள்ளிட்டோர் வெளியிட்ட அறிக்கைகளையும் மனதில் கொண்டு விரைவாகச் செயல்பட்டுஈழத் தமிழர்களுக்கு நீதிகிடைக்க இந்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ரம்பின் அதீத ஆசைகள்: உலகை மிரட்டும் அரசியல்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



வெனிசுலா, கனடா மற்றும் கிரீன்லாந்தை அமெரிக்கப் பகுதிகளாகக் காட்டும் செயற்கை நுண்ணறிவு வரைபடத்தை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் வெளியிட்டுள்ளார். அவரின் எண்ணம் தான் என்ன? திட்டங்கள் தான் என்ன என்பதை எவரும் அறிய முடியாது.

பொருளாதார ரீதியாக நாடுகளை வசப்படுத்துவது மட்டுமன்றி, உலகின் பல நாடுகளில் அவரது வரிச் சுமை அதிகரித்து வருகிறது. பிரான்ஸ் மீதான மிரட்டல் என்று கூறுமளவிற்கு, தனது ட்ரம்பின் அமைதி வாரியத்தில் இணையாத பிரான்சின் மதுபானங்கள் மீது இருநூறு வீத வரி விதிப்பதாக மிரட்டியுள்ளார். அவரது அதீத விருப்பங்களுக்கு இது ஒன்றே உதாரணமாகும்.

டொனால்ட் ட்ரம்பின் அதீத ஆசைகளில் இன்னொரு முக்கிய ஆசை, தொடர்ந்து மூன்றாவது முறை அதிபராகும் திட்டமாகும். ட்ம்ப்பின் ஆட்சியில் அதிகாரத்தை நிலைநாட்டுதல், அரசியல் எதிரிகளை பழிவாங்குதல், குடிவரவாளர்கள் மீது கடுமையான கொள்கைகள், புதைபடிவ எரிபொருட்களை அதிகரித்தல், மற்றும் தனது கொள்கைகளுக்கு உலக நாடுகளின் ஆதரவை பெற அழுத்தங்களை ஏற்படுத்தி வருகிறார்.

இது போன்ற செயல்கள் அவரது அதிபர் பதவிக்கு திரும்பும் லட்சியத்தால் உந்தப்படுகின்றன என்றே கூறலாம்.

ஒருமுறை அல்ல அதற்கும் அதிகமாக இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு முறைகள் அமெரிக்க அதிபராக சேவை செய்ய முடிவது என் வாழ்வில் மிகுந்த பெருமைக்குரிய விஷயம் என்று அண்மையில் தெரிவித்து இருந்தார்.

**அதீதம் நிறைந்த ட்ரம்பின் ஆசைகள்:**

மூன்றாவது முறை அதிபராகும் கனவில், 2028 தேர்தலில் வெற்றி பெற்று, அமெரிக்க அதிபராக மீண்டும் பதவி வகிப்பதே அவரது முக்கிய ஆசைகளில் ஒன்று. தொடரும் அதிபர் பதவி குறித்த ஆசைகளுக்காக, அடிக்கடி அதிகார கொள்கையை மாற்றுதல், அதிகாரத்தை குவித்தல் போன்ற அவரது நடவடிக்கைகள் சர்வாதிகாரப் போக்கைக் கொண்டிருப்பதாக சர்வதேச அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.



இந்நிலையில் தனக்கு எதிராக உள்ளவர்களை பழிவாங்க ஆட்சி அதிகாரத்தை முழுமையாக பயன்படுத்துவதாகவும் அவர் மீது குற்றச்சாட்டு உள்ளது. மேலும் குடிவரவு கொள்கைகளை மீறி, குடியேறியவர்களை முகாம்களில் அடைத்து, பாரிய நாடுகடத்தல் நடவடிக்கைகளை அவர் மேற்கொள்கிறார். சர்வதேச உறவு நிலையில் காசா அமைதி வாரியம் போன்ற திட்டங்களை நிறுவி, நாடுகளை அதில் இணைய கட்டாயப்படுத்தி அழைப்புவிடுப்பது, அதன் மூலம் தனது செல்வாக்கை நிலைநாட்டுவது அவரது ராஜதந்திரத்தின் ஒரு பகுதியாகவும் உள்ளது.

பிரான்ஸ் மீதான மிரட்டலாக, தனது அமைதி வாரியத்தில் இணையாத பிரான்ஸ் மதுபானங்கள் மீது இருநூறு வீத வரி விதிப்பதாக மிரட்டியமை அவரது அதீத விருப்பங்களுக்கு உதாரணமாகும். மேலும் சர்வதேச அளவில் சர்ச்சைக்குரிய செயல்களின் மூலம் ட்ரம்பின் அதீத ஆசைகள் தொடர்கிறது. அதிபர் பதவி மீண்டும் கிடைப்பது, அதிகாரத்தை நிலைநாட்டுவது, மற்றும் உலக அரங்கில் அமெரிக்காவின் அதிகாரத்தை தனது விருப்பப்படி மாற்றுவது போன்றவற்றை மையமாகக் கொண்டு பல நாடுகளை மிரட்டியும் வருகிறார்.

**ட்ரம்பின் நோபல் பரிசு ஆசை:**


கடந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசுக்கு ஆசைப்பட்டு, ஏழு போர்களை நிறுத்தி விட்டேன் என்று அதிபர் ட்ரம்ப் தம்பட்டம் அடித்தாலும், அவர் தேர்வு செய்யப்படவில்லை.

**அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இரண்டாம் முறையாக பதவியேற்று ஓராண்டை நிறைவு செய்யும் நிலையில், அவரின் அதீத ஆசைகளும், உலகை மிரட்டும் அரசியலால் பலத்த சர்ச்சைகள் எழுந்துள்ளன.**



எந்த ஆண்டும் இல்லாத வகையில் 2025ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு முக்கியத்துவம் பெற்றது. அதற்கு காரணம் அதிபர் ட்ரம்பின் கடந்த கால பேச்சும், திரும்ப திரும்ப நான் பல போர்களை நிறுத்தி விட்டேன் என்றும் கூறியது தான். அதுமட்டுமின்றி அவர் ஒரு படி மேலே போய், 'எனக்கு நோபல் பரிசு தராவிட்டால் அது அமெரிக்காவுக்கு பெரும் அவமானம்" என்றும் தெரிவித்தது தான் அனைவரது கவனம் பெற்றது.

கடந்தாண்டு அமைதிக்கான நோபல் பரிசை, வெனிசுலாவை சேர்ந்த மரியா கொரினா மச்சாடோ வென்றாலும், ட்ரம்பின் அதீத ஆசைக்கனவு குறைந்தபாடில்லை. அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காதமையால் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடும் கோபமடைந்தார்.




என்ன தான் ட்ரம்ப் தனது அதிகாரத்தை பயன்படுத்தி, பாரிய தம்பட்டம் அடித்துக் கொண்டாலும், அமைதிக்கான நோபல் பரிசு குறி தவறியது என்பதே வெளிப்படை. ட்ரம்ப் ஏழு போர்களை நிறுத்திவிட்டேன் என்று கூறி வந்தாலும், ட்ரம்புக்கு நோர்வே குழுவினர் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கவில்லை.

இதனையடுத்து நோர்வே நோபல் குழு அமைதியை விட அரசியலுக்கு முன்னுரிமை அளிப்பதாக வெள்ளை மாளிகை குற்றம் சாட்டியது. உலகின் மிகவும் மதிப்புமிக்க விருதை வெல்ல ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பல மாதங்களாக முயற்சி செய்து பிரச்சாரம் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

வெனிசுலா அதிபர் நிக்கலஸ் மதுரோ கைதானதற்கு மாற்றீடாக, கடந்தாண்டு அமைதிக்கான நோபல் பரிசை வென்ற வெனிசுலா எதிர்கட்சி தலைவர் சேர்ந்த மரியா கொரினா மச்சாடோ தனது பரிசை அதிபர் ட்ரம்பிற்கு வழங்கியுள்ளார்.

**மூன்றாவது முறை அதிபராகும் ஆசை:**

டொனால்ட் ட்ரம்ப் தனது சொந்த விருப்பப்படி, அமெரிக்க அரசியலமைப்பு சட்டத்திருத்தம் கொண்டு வர விரும்புகிறார். இது சாத்தியமாகவல்ல கனவா, அல்லது கானல் நீரா என்று விரைவில் தெரியவரும்.

இரண்டாவது பதவிக்காலம் முடியும் சமயத்தில் 82 வயதை நிறைவு செய்யப் போகும் ட்ரம்பிடம், அமெரிக்க நாட்டின் மிகக் கடினமான வேலையில் தொடர்ந்து சேவை புரிய விருப்பமா என்று கேட்கப்பட்டது, மூன்றாவது முறையாக அதிபராக வேண்டும் என்று தான் விரும்புவதாக கூறியுள்ளார்.

அமெரிக்க அரசியலமைப்பு சட்டத்தை மாற்ற வேண்டுமென்றால் செனட் மற்றும் பிரதிநிதிகள் அவையில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவும், அதோடு நாட்டின் மாகாண அரசுகளிடம் இருந்து நான்கில் மூன்று பங்கு ஆதரவும் வேண்டும். ஆனால் ட்ரம்பின் குடியரசுக் கட்சி நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் கட்டுப்படுத்தினாலும் தேவையான பெரும்பான்மை அதற்கு இல்லை. அதோடு மாகாண அவைகளில் 50ல் 18 ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளன.

ஆனாலும் அமெரிக்க அரசியலமைப்பு சட்டத்தில் நீதிமன்றத்துக்கு தெரியாத ஒரு ஓட்டை இருப்பதாக ட்ரம்ப் ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். ஒரு நபர் இரண்டு ஆட்சிக்காலத்துக்கும் மேல் தேர்வாவதைத்தான் தடை செய்கிறதே தவிர, பின்தொடர்வதைப்பற்றி அத்திருத்தம் எதுவும் குறிப்பிடவில்லை.

இந்தக் கோட்பாட்டின்படி இன்னொரு வேட்பாளருக்கு ட்ரம்ப் துணை அதிபராக இருக்கலாம். 2028 தேர்தலின் போது இப்போது அவருக்கு துணை அதிபராக இருக்கும் ஜே.டி.வான்ஸுக்குக் கூட. அவர்கள் வென்றால் அந்த வேட்பாளர் அதிபராக பதவிப் பிரமாணம் செய்ய வேண்டும் மற்றும் உடனே ராஜினாமாவும் செய்யலாம் - அவரைத் தொடர்ந்து ட்ரம்ப் பதவியேற்க வழி வகுக்கலாம் என்ற ஊகங்களும் உள்ளன.

இரண்டு முறைக்கு மேல் அமெரிக்க அதிபராக இருந்த ஃப்ராங்க்ளின் ரூஸ்வெல்ட் நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். தனது நான்காவது பதவிக்காலம் தொடங்கி மூன்றாவது மாதம் முடிந்த நிலையில் 1945ம் வருடம் ஏப்ரல் மாதம் அவர் உயிரிழந்தார். அவர் ஆட்சிக்காலத்தின் முக்கியப் பகுதிகளான பெரும் பொருளாதார வீழ்ச்சியும், இரண்டாம் உலகப்போரும் அவர் அதிபர் காலம் தொடர்ந்ததற்கான காரணிகளாகக் கூறப்படுகின்றன.



**வெனிசுலா, கனடா, கிரீன்லாந் அமெரிக்க வசமாகுமா?**

சர்வதேச அளவில் சர்ச்சையை ஏற்படுத்திய வெனிசுலா, கனடா கிரீன்லாந்தை அமெரிக்கப் பகுதிகளாகக் காட்டும் செயற்கை நுண்ணறிவு வரைபடத்தை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் வெளியிட்டுள்ளார்.

உலகின் அதிக எண்ணெய் வளமிக்க நாடான வெனிசுலா மீது தாக்குதல் நடத்திய அமெரிக்கப் படைகள், அந்நாட்டு ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவை சிறைப்பிடித்து சென்றது. தொடர்ந்து அந்நாட்டை அமெரிக்கா நிர்வாகம் செய்யும் என்றும் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

டென்மார்க் நாட்டின் தன்னாட்சிப் பகுதியாக விளங்கும் கிரீன்லாந்தை முழுவதுமாக அமெரிக்கா ஆக்கிரமிக்க வேண்டும் என ட்ரம்ப் கூறி வருகிறார். அமெரிக்காவின் பாதுகாப்புக்கு கிரீன்லாந்து மிகவும் முக்கியம் என்றும், நாங்கள் கிரீன்லாந்தை கைப்பற்றாவிட்டால் சீனா அல்லது ரஷ்யா கைப்பற்றிவிடும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு கிரீன்லாந்து மற்றும் டென்மார்க் மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். ஆனால் ட்ரம்ப் அரசு தனது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது. இதேவேளை அமெரிக்காவின் இந்த முடிவுக்கு, டென்மார்க் மற்றும் ஏராளமான ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

வெனிசுலா, கனடா நாடுகள் மற்றும் கிரீன்லாந்தை அமெரிக்காவின் பகுதிகளாகக் குறிப்பிட்டு செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்பட்ட வரைபடத்தை அதிபர் ட்ரம்ப் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளமைக்கு பலத்த கண்டனங்கள் எழுந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலங்கம, ஏறாவூர் பகுதிகளில் போதைப்பொருள் வேட்டை

## இருவர் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு, ஜன. 25

தலங்கம - புஸ்ஸெல்ல பகுதியில், ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகள் குழுவினரால் நடத்தப்பட்ட சோதனையின்போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து, 400 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் கடத்தலில் பெறப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 3 இலட்சத்து 20, 000 ரூபாய் பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கடுவளை பகுதியை சேர்ந்த 42 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை, மட்டக்களப்பு - ஏறாவூர் பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் வெள்ளிக்கிழமை இரவு சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போதே இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து 113 கிராம் 600 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் கடத்தலில் இருந்து பெறப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 2 இலட்சத்து 7,200 ரூபாய் பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளது. (எ)

# நுவரெலியாவில் உறைபனி பொழிவு: மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

நுவரெலியா, ஜன. 25

நிலவும் குளிருடனான வானிலையால் நுவரெலியாவின் பல இடங்களில் நேற்றுச் சனிக்கிழமையும் உறைபனி பொழிவு ஏற்பட்டுள்ளது.

நாட்டின் மிகக் குறைந்த வெப்பநிலை நேற்று நுவரெலியாவில் பதிவாகியுள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நுவரெலியாவில் 7. 8 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

இதேநேரம், மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் அமைந்துள்ள நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் அடர்ந்த உறைபனி காணப்படுவதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், போக்குவரத்துக்கும் இடையூறுகள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக ஹற்றன் - நுவரெலியா, ஹற்றன் - கொழும்பு பிரதான வீதிகள் மற்றும் பக்கவாட்டு வீதிகளில் பரவலாக உறைபனி காணப்படுகிறது.

இதன் காரணமாக, குறித்த வீதிகளில் வாகன சாரதிகள் மெதுவாகவும் கவனமாகவும் வாகனங்களை செலுத்துமாறு ஹற்றன் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (எ)

# சட்டவிரோத மணல் அகழ்வு: மூவருக்கு அபராதம் விதிப்பு

சம்மாந்துறை, ஜன. 25

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவருக்கு, ஓர் இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்து சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் அனுமதி பெறாத இடத்தில் மணல் அகழ்வு இடம்பெறுவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில், கடந்த வியாழக்கிழமை சம்மாந்துறை ஊழல் ஒழிப்பு பொலிஸ் பிரிவினரும் மல்வத்தை விசேட அதிரடிப்படையினரும் இணைந்து விசேட சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது, மணல் அகழ்வில் ஈடுபட்டுவிட்டு உழவியந்திரங்களில் தப்பிச் செல்ல முற்பட்டவர்கள் வீதியில் வைத்து மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டனர்.

இந்தச் சோதனையின் போது, பாதுகாப்பு கவசங்கள் இன்றி பாதுகாப்பற்ற முறையில் மணல் ஏற்றிச் சென்ற உழவியந்திரம் உட்பட 3 உழவியந்திரங்கள் கைப்பற்றப்பட்டதுடன், 3 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டு சம்மாந்துறை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட 3 உழவியந்திரங்கள் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் சம்மாந்துறை நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது வழக்கை விசாரித்த நீதிவான், சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றத்துக்காக மூவருக்கும் மொத்தமாக ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்து உத்தரவிட்டார். (எ-01)

# யுத்தகால பாலியல் வன்முறைகளுக்கு சர்வதேச பொறுப்புக்கூறல் அவசியம்!

## கனேடிய தமிழர் தேசிய பேரவை வலியுறுத்தல்

கொழும்பு, ஜன. 25

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற யுத்த காலத்தில் இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் குறித்து சர்வதேச ரீதியான பொறுப்புக்கூறலை அவசியம் என்பதை கனேடிய தமிழர் தேசிய பேரவை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஜனவரி 13, 2026 அன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையை மேற்கோள் காட்டி, இலங்கையில் யுத்தக காலத்தில் பாதுகாப்புப் படைகளால் தமிழர்கள் பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என கனேடிய தமிழர் தேசிய பேரவை தெரிவித்துள்ளது.

1985 முதல் 2024 வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஐ.நா. விசாரணைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுடன் நடத்தப்பட்ட நேரடி கலந்துரையாடல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதாக ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, பாலியல் வன்முறை என்பது அச்சுறுத்தல், தண்டனை மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கான ஆயுதமாக திட்டமிட்ட முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

காவல் நிலையங்கள், தடுப்பு முகாம்கள், சோதனைச் சாவடிகள் மற்றும் வீடுகளிலேயே கூட தமிழ்ப் பெண்கள் மற்றும் ஆண்கள் கடுமையான பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

பாலியல் வன்முறைகள் காரணமாக உடல் மற்றும் மனநல பாதிப்புகள், குடும்ப அமைப்புகள் சிதைவு, சமூக ஒதுக்கல், வறுமை, நீண்ட கால நோய்கள், இனப்பெருக்க பாதிப்புகள் போன்ற பல விளைவுகள் ஏற்பட்டுள்ளதாக அறிக்கை கூறுகிறது. மேலும், இந்த பாதிப்புகள் தலைமுறை தலைமுறையாக தொடரும் மனஅழுத்தங்களாக மாறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பாலியல் வன்முறைகளுக்கு காரணமான எவரும் இதுவரை சட்டத்தின் முன் கொண்டுவரப்படவில்லை என்றும், இலங்கையின் அரசின் உள்ளக விசாரணை முறைகள் நம்பகமான நீதியை வழங்கத் தவறியுள்ளதாகவும் கனேடிய தமிழர் தேசிய பேரவை குற்றம் சாட்டியுள்ளது.

இதனால், முழுமையாக சர்வதேசத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும், சுயாதீனமான, நம்பகமான விசாரணை மற்றும் வழக்குத் தொடரும் அமைப்பு ஒன்றே உண்மையை வெளிக்கொண்டு வர முடியும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஐக்கிய நாடுகள், கனடா அரசு மற்றும் சர்வதேச சமூகத்தினர் இணைந்து உடனடி, வலுவான மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு,

மோதல் தொடர்பான பாலியல் வன்முறைகள் மற்றும் தமிழர் இன அழிப்பு குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச பொறுப்புக்கூறலை உறுதி செய்ய வேண்டும் என கனேடிய தமிழர் தேசிய பேரவை அறிக்கையொன்றை வெளியிட்டு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் யுத்த காலத்தின்போது இடம்பெற்ற பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களிடம் இலங்கை அரசு பகிரங்கமாக மன்னிப்பு கோர வேண்டுமெனவும் யுத்த காலத்தின் போது இடம்பெற்ற பாலியல் வன்முறைகளுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கடலில் மூழ்கி வெளிநாட்டு பிரஜை பலி!

கொழும்பு, ஜன. 25

திக்வெல்ல - ஹிரிகெட்டிய கடலில் நீராடச்சென்ற வெளிநாட்டு பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக திக்வெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் 65 வயதுடைய உக்ரைன் நாட்டு பிரஜை என தெரியவந்துள்ளது.

திக்வெல்ல பொலிஸார், இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மட்டக்களப்பு இளைஞர்கள் இருவர் விபத்தில் சிக்கி பரிதாபமாக பலி!

மட்டக்களப்பு, ஜன. 25

மட்டக்களப்பு - ஏறாவூர் பகுதியில், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கப்ரக வாகனமொன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்தனர்.

எதிர்த் திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள், கப்ரக வாகனமொன்றுடன் மோதியதில், மோட்டார் சைக்கிள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி மற்றும் இரண்டு பயணிகள் படுகாயமடைந்து மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது, மோட்டார் சைக்கிள் சாரதி மற்றும் பயணி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர்கள் மட்டக்களப்பு ஏறாவூர் 01 மற்றும் குடியரசு பகுதிகளைச் சேர்ந்த 17 மற்றும் 21 வயதுடையவர்கள் என தெரியவருகிறது.

கப்ரக வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## அநுர குமார...

9ஆம் பக்கத் தொடர்ச்சி...

உரிமையி ல்லை. தமிழரசு குறித்த அநுர தரப்பு குத்தி முறியவும் தேவையில்லை என்று கட்சியின் நிலைப்பாட்டை எவரும் இலகுவாகப் புரியும் வகையில் தெரி வித்திருந்தார்.

இவர் இவ்வாறு கூறியதற்காக அநுர தரப்பினர் அமைதியாக இருந்துவிடப் போவதில்லை. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் குத்திக்கொண்டேயிருப்பார்கள். இங்கே நான் குறிப்பிட விரும்புவது இதுவல்ல. சிறீதரன் விடயமாக அண்மையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் பிரேமச்சந்திரன் அநுர தரப்பினர் கூறிய அதே கருத்தை பகிரங்கமாக தெரிவித்திருந்தார்.

தெற்கில் சிங்களக் கட்சிகளின் பிரதிநிதியாகவிருக்கும் தயாசிறி ஜெயசேகர தமிழரசுக் கட்சியின் ஆபத்பாந்தவனாகத் தம்மை காட்டி, சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதியான சிறீதரன் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தி பதவி விலகுமாறு கோருவதற்கு யார் உரிமை அளித்தது?

தமிழரசுக் கட்சியின் உள்விவகாரங்களில் தலையிடும் உரிமை எவருக்கும் கிடையாது என்று அடித்துக்கூறிய அதன் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், எந்தவகையில் சுரேஸ் பிரேமச்சந்திரனும் தயாசிறி ஜெயசேகரவும் சிறீதரன் சம்பந்தமான தமிழரசுக் கட்சி விவகாரத்தில் தலையிடவும் பகிரங்கமாக கருத்துக் கூறவும் அனுமதித்தார் என்பதை அறிவதற்கு அக்கறையுள்ளவர்கள் ஆர்வமாகவுள்ளனர்.

# யாசகப் பெண்ணை கொடூரமாக கொலை செய்த இளைஞர் சரண்!

கொழும்பு, ஜன. 25

கண்டியில் துட்டகைமுனு மவத்தை பகுதியில் இளைஞன் ஒருவன், யாசகப் பெண் ஒருவரை கொடூரமாக கொலை செய்துள்ளதாக கண்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கொலை சம்பவம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரான இளைஞன் கண்டி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததையடுத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் கண்டி பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய இளைஞன் ஆவார்.

யாசகப் பெண்ணுக்கும் இளைஞனுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த கொலை சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல்...

ஆண்டிற்குள் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

வடக்கு மற்றும் தெற்கு ஆகிய இரு பகுதிகளிலும் இடம்பெற்ற காணாமல் போன சம்பவங்கள் குறித்து நாங்கள் விசாரணைகளை முன்னெடுப்போம் என அமைச்சர் உறுதியளித்தார். (அ)

## தேசிய...

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் ஊழல், மோசடிக்கு இடமில்லை. நாம் மக்கள் மத்தியில் உண்மையைக் கூறி செயல்பட்டுவருகின்றோம்.எனவே, எமது ஆட்சி தொடர்வதற்கு மக்கள் ஆணை வழங்கு வார்கள்.

நவீன உலகை வெல்ல வேண்டுமெனில் கல்வி மறுசீரமைப்பு அவசியம். அதனை செய்வதற்கே அரசாங்கம் முயற்சிக்கின்றது.

எனினும், கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கையில் இடம்பெற்றுள்ள ஒரு பிழையை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த மறுசீரமைப்பையும் குழப்புவ தற்கு முற்படுகின்றனர்.

இது எமது நாட்டு பிள்ளைகளின் எதிர்காலத்தை சீரழிப்பதற்கு முயற்சிக்கின்றனர்-என்றார். (அ)

## டித்வா...

கொள்வனவிற்கு அரசாங்கம் வழங்கும் 50,000 ரூபாய் கொடுப்பனவில் தற்போது 70 வீதம் வழங்கப் பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

25 மாவட்டங்களில் மொத்தம் 156,805 குடும்பங்கள் இந்தக் கொடுப்பனவுக்காகக் கணக்கிடப்பட்டதுடன், அவற்றில் 109,512 குடும்பங்களுக்கு இதுவரை குறித்த தொகை வழங்கப்பட்டுள்ளது.

நுவரெலியாவில் 1,191 குடும்பங்கள் இந்த உதவித் தொகையைப் பெற தகுதி பெற்றிருந்ததுடன், அந்த அனைத்து குடும்பங்களுக்கும் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல், மாத்தளை மாவட்டத்தில் 1,253 குடும் பங்களில் 1,143 குடும்பங்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளதுடன், அது 91 வீத முன்னேற்றம் ஆகும்.

கண்டி மாவட்டத்தில் 8,409 குடும்பங்களில் 7,083 குடும்பங்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. அது 84 வீத முன்னேற்றம் ஆகும்.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப் பாணம், வவுனியா, கிளிநொச்சி, அம்பாறை, பதுளை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் 50,000 ரூபாய் கொடுப்பனவு வழங்க கணக்கிடப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் வழங்கி நிறைவு செய்யப் பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் ரூபாய் 50,000 கொடுப் பனவு 98 வீதம் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 99 வீத பயனாளிகளுக் கும், குருநாகல் மாவட்டத்தில் 91 வீதமானவர்களுக்கும், அநுராதபுர மாவட்டத்தில் 84 வீத பயனாளிகளுக்கும், கேகாலை மாவட்டத்தில் 93 வீத பயனாளிகளுக்கும் உதவித்தொகை விநியோகிக்கப்பட்டுள்ளது.

மேலும், அனர்த்தத்திற்குப் பின்னர் வீடுகளை சுத்தம் செய்வதற்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் 25,000 ரூபாய் உதவித்தொகையை செலுத்துவதில் மொத்த முன்னேற்றம் 97 வீதம் ஆகும்.

25 மாவட்டங்களில் 435,104 குடும்பங்கள் இந்தக் கொடுப்பனவைப் பெறத் தகுதி பெற்றிருந்ததுடன், அவற்றில் 422,900 குடும்பங்களுக்கு இதுவரை இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, களுத்துறை, நுவரெலியா, காலி, அம்பாந் தோட்டை, கிளிநொச்சி, அம்பாறை, பதுளை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் உள்ள தகுதி பெற்ற அனைத்து குடும்பங்களுக்கும் கொடுப்பனவு முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் 25,000 ரூபாய் கொடுப்பனவு வழங்குவதில் 99 வீத முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் 95 வீதம், யாழ்ப்பாண மாவட்டத்தில் 88 வீதம், மன்னார் மாவட்டத்தில் 94 வீதம், வவுனியா மாவட்டத்தில் 99 வீதம், முல்லைத்தீவு மாவட்டத்தில் 98 வீதம், மட்டக்களப்பு மாவட்டத்தில் 98 வீதம், திருகோணமலை மாவட்டத்தில் 98 வீதம், குருநாகல் மாவட்டத்தில் 98 வீதம், புத்தளம் மாவட்டத்தில் 97 வீதம், அநுராதபுர மாவட்டத்தில் 98 வீதம், பொலன்னறுவை மாவட்டத்தில் 97 வீதம், இரத்தினபுரி மாவட்டத்தில் 99 வீதம் மற்றும் கேகாலை மாவட்டத்தில் 90 வீதம் ஆகிய பகுதிகளுக்கு 25000 ரூபாய் கொடுப்பனவு வழங்கி நிறைவு செய்யப்பட் டுள்ளது. (அ)

## பிரஜாசக்தி...

“பிரஜாசக்தி” தேசிய வேலைத்திட்டம் குறித்து நாட்டின் அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கடமையாற்றும் பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் உதவி திட்டமிடல் பணிப்பூளர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக நேற்று அலரி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வின் போதே இவ்விடயம் குறிப்பிடப்பட்டது.

இதில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, “பிரஜாசக்தி” தேசிய இயக்கமானது புதிய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வறுமை ஒழிப்புக்கான பிரதான அபிவிருத்தி வேலைத்திட் டமாகும் எனக் குறிப்பிட்டார்.

2026 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் மற்றும் முன்மொழிவுகள் ஊடாக கிராமிய அபிவிருத்திக்காக சுமார் 180 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அந்த ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தும் போது கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் ஸ்தாபிக்கப்பட் டுள்ள சமூக அபிவிருத்திச் சபைகளுக்கு விசேட பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதியின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

அந்தப் பணிகள் அனைத்தையும் அதிகபட்ச வினைத்திறனுடனும் பயனுள்ள வகையிலும் நடைமுறைப்படுத்தும் போது, பிரதேச செயலகப் பிரிவுகளில் இணைக்கப்பட்டுள்ள பிரதி மற்றும் உதவிப் பணிப்பாளர்களிடம் பாரிய பொறுப்பு காணப்படுவதாகவும் ஜனாதிபதியின் செயலாளர் மேலும் சுட்டிக்காட்டினார்.

சமூக அபிவிருத்திச் சபைகளினால் 2026 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி முன்மொழிவுகளை அடையாளம் காணல், அவற்றை முன்னுரிமைப் படுத்தல் மற்றும் அந்த அபிவிருத்தி முன்மொழிவுகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கபில ஜனக்க பண்டார இதன்போது தெரிவித்தார்.

அதன்கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சமூக அபிவிருத்திச் சபைகள் செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், ஒட்டுமொத்த சமூகத்தினதும் முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் ஒருங்கி ணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்க வேண்டியதன் அவசியம், திட்டங்களைச் சரியாக அடையாளம் காணல் மற்றும் விஞ்ஞான ரீதியான அடிப்படையில் திட்டங்களை முன்னுரிமைப்படுத்தும் விதம் குறித்தும் ஜனாதிப தியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர், நிகழ்ச்சித்திட் டத்தில் கலந்துகொண்ட பிரதி மற்றும் உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள் தெளிவுபடுத்தினார்.

அந்தச் செயன்முறையை மேற்கொள்வதற்கு அவசியமான தொழில்நுட்ப விடயங்கள் குறித்தும் அவர் இதன்போது விரிவாகக் கலந்துரையாடினார்.

முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதியும் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமுமான ரங்க திஸாநாயக்க கருத்துத் தெரிவிக் கையில்-

அரச சேவையில் இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழித்து நேர்மையை உறுதி செய்வது சமூகத்தின் முன்னோக்கிய பயணத்திற்கு எவ்வளவு தீர்க்கமானது என்பது குறித்தும், அரச உத்தியோகத்தர்களுக்கு அதற்கான பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல் குறித்தும் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி செயலகத்தின் பணிப்பாளர் சோமசிறி ஏக்கநாயக்க, “பிரஜாசக்தி” தேசிய இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் போது பிரதி மற்றும் உதவி திட்டமிடல் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் பொறுப்புக்கள் மற்றும் பணிகள் குறித்து விளக்கம ளித்தார். (அ)

## ஜனவரி...

சூறாவளியால் ஏற்பட்ட இடையூறுகளைத் தொடர்ந்து, டிசெம்பர் முதல் கொள்கலன் வெளியேற்றம் விரைவுபடுத்தப்பட்டது, இந்த வருமான அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், அதிக இறக்குமதி அளவுகளும் கூடுதல் வருமானத்தில் பங்களித்துள்ளது.

2025 ஆம் ஆண்டில், 2,551 பில்லியன் ரூபாவை வசூலித்து, சிறிலங்கா சுங்கம் அதன் வரலாற்றில் அதிகபட்ச ஆண்டு வருமானத்தை பதிவு செய்தது.

இது திருத்தப்பட்ட ஆண்டு இலக்கான 2,241 பில்லியன் ரூபாவைத் தாண்டியது.

2024ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 1,553 பில்லியன் ரூபா வருமானத்துடன் ஒப்பிடும்போது 64.2 வீத அதிகரிப்பாக இருந்தது.

2026 ஆம் ஆண்டில், சுங்கம், 2.2 டிரில்லியன் ரூபாவை ஆண்டு வருமான இலக்காக நிர்ணயித்துள்ளது, இது கடந்த ஆண்டை விட 13.5 வீதம் குறைவாகும்.

வாகன இறக்குமதியில் குறிப்பிடத்தக்க சரிவு ஏற்படும் என்ற எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் குறைந்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ)

## வடக்கு...

மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

அதேவேளை ஈரப்பதன் நிறைந்த கீழைக்காற்றின் வருகை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய வரண்ட காற்றின் செல்வாக்கு குறைவடைந்து குளிர் நிலைமை சற்று சீரடைந்துள்ளது.

ஆனால் மீண்டும் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் குளிரான வானிலை நிலவத் தொடங்கும்.

வடக்கு, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங் களில் நெல் அறுவடை மற்றும் நெல் அறுவடைக்கு பின்னான செயற்பாடுகளை மேற்கொள்ளும் விவசாயிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை தமது செயற்பாடுகளைத் தவிர்ப்பது சிறந்தது-என்றார். (அ)

## சம்பந்தனின்...

அவர் சாடியுள்ளார்.

மக்களாட்சியின் முக்கிய அங்கமான மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

எனினும், அரசாங்கம் ஒரு தெரிவுக்குழுவை நியமித்து, தேர்தலை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து இன்னும் ஆராய்ச்சிகளையே செய்து கொண்டிருக்கிறது என அவர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் பேசும்போது வரவேற்கத்தக்க கருத்துக்களைக் கூறினாலும், நடைமுறையில் தமிழ் மக்களுக்கு எதிரான செயல்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன என்று சாணக்கியன் தெரிவித்தார்.

கடந்த கால அரசாங்கங்களை விடவும் மோசமான முறையில் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் இப்போதைய ஆட்சியிலும் தொடர்கின்றன என்று அவர் குறிப்பிட்டார். (அ)

## எதிரணியின்

திரிபுபடுத்திய விடயங்களை கூறி வந்ததுடன், புத்தகத்தின் நிறம் பற்றியும் தவறான கீழ்த்தரமான கருத்துக்களை பரப்பினர். இந்த விடயத்தில் பொய்யான குற்றச்சாட்டுகளையும் முன்வைத்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் கருத்துக்களை தெரிவிக்கும் போது, அதனை பொறுப்புடன் கூறவேண்டும். பௌத்த பாடப்புத்தகத்தில் தர்ம சக்கரத்திற்கு பதிலாக அசோக சக்கரம் உள்ளதாக கூறினார். இதில் மதத்தை தொடர்புபடுத்துவது கல்வி மறுசீரமைப்புக்கு எதிராக முன்னெடுக்கும் நடவடிக்கைகளின் ஒரு அங்கமாகவே இவ்வாறாக பொய்களை கூறினர். ஆனால் காலம் காலமாக பயன்படுத்தும் சின்னமே பாடப்புத்தகத்தில் உள்ளது. அதில் மாற்றம் செய்யப்படவில்லை. கல்வி மறுசீரமைப்பு ஒத்திவைக்கப்படுவதற்கான எதிர்க்கட்சியின் அரசியல் சூழ்ச்சியே அது. அதற்காக பல்வேறு கருத்துக்களையும் பொய்களையும் கூறுகின்றனர்.

கல்வி மறுசீரமைப்பானது எதிர்கால எமது பிள்ளைகளுக்காக செய்யப்படும் நடவடிக்கையாகும். ஆங்கில பாடப்புத்தகத்தில் தவறான இணையத்தள முகவரியொன்று மட்டுமே உள்ளது. இதனையே இவர்கள் உதாரணமாக எடுத்து செயற்படுகின்றனர். ஆனால் இது அரசியல் சூழ்ச்சிகளுடன் நடந்ததா? என்று ஆராயப்படுகின்றது. கல்வி மறுசீரமைப்பை தடுப்பதற்கு பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தனர். இதற்காக பல காரணங்களை கூறுகின்றனர். எதிர்க்கட்சியினர் பிள்ளைகளின் எதிர்காலத்தை சீர்குலைக்க சூழ்ச்சிகளில் ஈடுபடுகின்றனர்.

நாங்கள் கல்வி மறுசீரமைப்பில் அமைச்சரவையில் தீர்மானத்தை எடுத்தோம். சகல பிள்ளைகளுக்கும் முறையான கல்வியை வழங்கவே நாங்கள் முயற்சிக்கின்றோம். ஆனால் எதிர்க்கட்சியினர் அவ்வாறான எண்ணத்தில் செயற்படவில்லை.

ஒரு குழுவொன்றே இவ்வாறு செயற்படுகின்றது. எதிர்க்கட்சியில் சில கட்சிகள் நம்பிக்கையில்லா பிரேரணையில் கையெழுத்திடவில்லை. இப்போது அந்த பிரேரணையை மேசை பெட்டகத்தில் வைத்திருக்கின்றனர். எவ்வாறாயினும் நாங்கள் கல்வி மறுசீரமைப்பை கொண்டுவருவதற்காக மக்களுக்கு வாக்குறுதியளித்துள்ளோம் அதனை நிச்சயமாக முன்னெடுத்து செல்வோம்-என்றார். (அ)

## கீரிச் சம்பா...

அரசாங்கம் இந்த வகைகளின் கொள்முதல் விலையை அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார். (அ)

## கிளிநொச்சி...

இருந்து வருகை தந்த முச்சக்கர வண்டியுடன் மோதுண்டு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## "இலங்கையைக் கட்டியெழுப்புவோம்" எனும் கருப்பொருளில் சுதந்திர தினம்

கொழும்பு, ஜன. 25

இலங்கையின் 78ஆவது சுதந்திர தினத்தின் கருப்பொருளை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வெளியிட்டுள்ளது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு "இலங்கையைக் கட்டியெழுப்புவோம்" எனும் கருப்பொருள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி, 78ஆவது சுதந்திர தின நிகழ்வுகளை, கொழும்பு சுதந்திர சதுக்க வளாகத்தில், மிகவும் பிரம்மாண்டமான முறையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள், தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ)

## ஐ,தே.க. - ஐக்கிய மக்கள் சக்தி மற்றுமொரு கலந்துரையாடல்!

கொழும்பு, ஜன. 25

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் மற்றுமொரு தீர்க்கமான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

நேற்று காலை கொழும்பில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதன் பொதுச்செயலாளர் தலதா அத்துக்கோரள, பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன, உப தவிசாளர் நவீன் திஸாநாயக்க, அகில விராஜ் காரியவசம் மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர் என தெரிவிக்கப்பட்டது. இக்கலந்துரையாடலின் போது இரு தரப்பினரும் இணைந்து செயற்படுவது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை, தனது எக்ஸ் கணக்கில் பதிவிட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் மற்றுமொரு வெற்றிகரமான கலந்துரையாடல் இடம்பெற்றதாகவும், அது வெற்றிகரமான முடிவை நோக்கி இட்டுச் செல்லும் என தான் நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ)

## யாழில் திடீரென மயங்கி விழுந்த குடும்ப பெண்ணொருவர் மரணம்!

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணத்தில் திடீரென மயங்கி விழுந்த குடும்பப் பெண்ணொருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

திருநெல்வேலி - கலாசாலை வீதியைச் சேர்ந்த சுபாகரன் ரதினி (வயது 49) என்ற, 4 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் நேற்று காலை கழிப்பறைக்கு சென்றுள்ளார். நீண்ட நேரமாகியும் அவர் திரும்பி வராத காரணத்தால் மகன் அவரை தேடிச்சென்று பார்த்தவேளை மயக்க நிலையில் காணப்பட்டுள்ளார்.

பின்னர் அவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.(அ-05)

## காய்ச்சல் காரணமாக யாழ்.இளைஞர் மரணம்!

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணத்தில் காய்ச்சல் காரணமாக ஆணொருவர் நேற்று உயிரிழந்துள்ளார். கொழும்புத்துறை - ஹெலன் தோட்டத்தை சேர்ந்த கிறிஸ்ரி ஜெயானந்தன் யூட் கிமோசன் (வயது 32) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 21ஆம் திகதி காலை இவருக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் சிகிச்சை பெற்றுள்ளார். இருப்பினும் காய்ச்சல் குணமாகாததால் 22ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று காலை உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் மேற்கொண்டார். (அ-05)

# அரசாங்க இயந்திரம் முழு அரசியல் மயம்!



### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 25

அரசாங்கம் அரச இயந்திரத்தை முழுமையாக அரசியல் மயப்படுத்த முயல்கின்றமையே தெளிவாவதாக ஐக்கிய மகள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊட கங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கணக்காய்வாளரை நியமிக்கும் விடயத்தை அரசாங்கம் காலம் தாழ்த்திய வண்ணமே உள்ளது. அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் நாட்டின் அரச அதிகாரிகள் கணக்காய்வு குறித்து பேசிய விடயங்கள் அனைத்தையும் மறந்து செயற்படுகின்றனர். அதுவும் வேண்டும் என்றே கணக்காய்வாளரை நியமிக்கும் விடயத்தை காலம் தாழ்த்துகின்றனர்.

இதன் பின்னணியில் அரசாங்கம் தமக்கு ஏற்றவர்களை குறித்த பதவிக்கு நியமிக்க முயல்கின்றமை புலனாகின்றது. ஜனாதிபதி பரிந்துரைத்த அனைவரின் பெயர்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன. முக்கியமாக அதே சேவையில் தேர்ச்சி பெற்ற 30 வருட அனுபவம் உள்ள பலர் உள்ளனர். ஆனால் ஜனாதிபதியின் பெயரை பரிந்துரைக்கவில்லை. மாறாக அவருக்கு ஏற்றவர்களை நியமிக்க அவர்களின் பெயர்களை பரிந்துரைக்கின்றார். இதன் காரணமாக அரச இயற்திரத்தினுள் சிக்கல் நிலை தோன்றியுள்ளமை தெளிவாகின்றது. கணக்காய்வை மேற்கொள்ள முடியாத சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. கோப் கோப்பா குழுக்களை கூட்ட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. அதேபோல் அரச இயந்திரத்தை முழுமையாக அரசியல் மயப்படுத்த முயல்கின்றமையே தெளிவாகின்றது - என்றார். (அ)

## 524 பேர் கைது!

கொழும்பு, ஜன. 25

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, 524 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

30 ஆயிரத்து 236 பேரிடம் பரிசோதனை நடத்தப் பட்டதுடன், 17 பேர், குற்றங்களுடன் நேரடியாக தொடர்புடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கு அமைய 256 பேரும், திறந்த பிடியாணைகளுக்கு அமைய 200 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், மதுபோதையில் வாகனம் செலுத்திய 429 பேரும், கவனக் குறைவாக வாகனம் செலுத்திய 53 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய போக்குவரத்து குற்றங்களுக்காக 4 ஆயிரத்து 706 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ)

## இணையவழி மோசடி குறித்து பொலிஸாரால் 318 பேர் கைது!

கொழும்பு, ஜன. 25

கடந்த ஆண்டில் இணையவழி மோசடிகள் தொடர்பில் 318 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவி பொலிஸ் அத்தியட்சகருமான எவ்.யூ.வூட்லர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் 2,000 இற்கும் அதிகமான சைபர் குற்றங்கள் பதிவாகியுள்ளதாகவும் இந்த சைபர் குற்றவாளிகளின் இலக்காக நாட்டின் இளம் சமூகத்தினர் மற்றும் முதியவர்கள் மாறியுள்ளதாகத் தெரிவித்த அவர், இணையத்தளத்துக்குப் புதிதாகப் பிரவேசிப்பவர்களும் இந்தக் குற்றவாளிகளின் இலக்காகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமது கடவுச்சொற்கள் மற்றும் தனிப்பட்ட தகவல்களை இவ்வாறான தரப்பினருக்கு வழங்குவதைத் தவிர்க்க வேண்டுமென தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாராவது ஒருவர் மிகவும் பிரபலமான ஒரு நபராகவோ அல்லது பிரபலமான நிறுவனத்தின் பெயரிலோ உங்களுடன் தொடர்பு கொண்டு, உங்களின் தொலைபேசி இலக்கம், கடவுச்சொற்கள் மற்றும் ஓ.ரி.பி. இலக்கங்களைப் பெற்றுக் கொண்டு உங்களின் இலட்சக்கணக்கான பணத்தைக் கொள்ளையிட முடியும். அதேபோல் நீங்கள் இலட்சாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள், இலட்சக்கணக்கான சீட்டிழுப்பில் வெற்றி பெற்றுள்ளீர்கள் என்ற செய்தியுடன் உங்களை ஏமாற்றுகின்றனர்.

அந்த இலட்சக்கணக்கான பணப் பரிசைப் பெறுவதாயின் நீங்கள் இந்த முறையைப் பின்பற்ற வேண்டும் என வழிகாட்டுகின்றனர். பின்பற்ற வேண்டிய முறை என்ன? உங்களின் ஓ.ரி.பி. இலக்கம், தனிப்பட்ட தகவல்கள், வங்கித் தகவல்கள் இவற்றை நாம் திரும்பத் திரும்பக் கூறினாலும், சில தாய்மார்கள், தந்தைமார்கள் மற்றும் இளைஞர்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை ஒரு குற்றவாளிக்கு அல்லது மோசடிக்காரருக்கு வழங்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது-என்றார். (அ)

## 3ஆவது யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாடு யாழ். பல்கலை மருத்துவ பீடத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை மற்றும் இந்தியாவின் பிரசித்தி பெற்ற சுரானா சட்ட நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்தும், மூன்றாவது யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாடு, இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட ஹூவர் கலையரங்கில் ஆரம்பமானது.

விசேட அதிதியாக, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பங்கேற்றார்.

சுரானா சட்ட நிறுவனத்துடன் இணைந்து, 2024 ஆம் ஆண்டில் முதலாவது சட்ட மாநாட்டை நடத்திய யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை, 2025 இல் இரண்டாவது மாநாட்டையும் வெற்றிகரமாக நடத்தியிருந்தது.

அதன் தொடர்ச்சியாக, சர்வதேச சட்ட நிபுணர்களை இணைத்து நடத்தப்படும் மூன்றாவது சட்ட மாநாடு நேற்று ஆரம்பமானதுடன், இன்றும் இடம்பெறவுள்ளது.




முதல் நாள் அமர்வுகளில், நீதித்துறை மற்றும் நிர்வாகத் துறையின் உயர்மட்டப் பிரதிநிதிகள் பலர் பங்கேற்றனர்.

உயர் நீதிமன்ற நீதிபதி சிதம்பரம்பிள்ளை துரைராஜா மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் ரோஹித அபேசூரிய ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில், வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி சரண்யா ஹசந்தி உருகொடவத்தே திசாநாயக்க மற்றும் யாழ்ப்பாண இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிறி சற்குணராஜா மற்றும் சட்டத்துறை தலைவர் திருமதி கோசலை மதன், சட்டத்துறை விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள், மாணவர்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் எனப் பலர் பங்கேற்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.